# உலகளாவிய தரவுத் தனியுரிமைக் கொள்கை (புறவியல்)

பதிப்பு 1.0 | 14 தேதி 2022

## பதிப்புரிமைத் தகவல்

இந்த ஆவணம் LTIMindtree Limited (LTIMindtree) தனிப்பட்ட சொத்து ஆகும்; இதைப் பெறுபவர்கள் இந்த ஆவணத்தில் உள்ள இரகசியமான மற்றும் தனியுடைமைத் தகவல்களை LTIMindtreeஇன் வெளிப்படையான எழுத்துப்பூர்வ ஒப்புதல் இன்றி எந்த வழியிலும் நகலெடுக்கவோ, பகிரவோ, பயன்படுத்தவோ அல்லது வெளிப்படுத்தவோ கூடாது.

## திருத்த வரலாறு

சமீபத்திய பதிப்பை மேலே குறிப்பிடவும்

| பதி | மாற்ற விவரம் | பிரிவுகள் | தேதி | ஆசிரியர் | மீளாய்வாளர் | ஒப்புதலிளித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| 0.1 | ஆரம்ப ஆவணம் | அனைத்தும் | 14வது நவம்பர், 2022 | தரவுத் தனியுரிமை அலுவலகம் | சட்டப்பிரிவு | தரவுத் தனியுரிமை அலுவலர் |

## குறிப்புரைகள்

இது ஒரு உலகளாவிய தரவுத் தனியுரிமைக் கொள்கை ஆகும், மேலும் தகவல்கள் மற்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கான கூடுதல் விவரங்களுக்கு பின்வரும் ஆவணங்களைப் பாருங்கள்:

| எண் | ஆவணத்தின் பெயர் | பதி | அமைவிடம் |
|---|---|---|---|
| 1. | LTIMindtree பொதுத் தரவுத் தனியுரிமை அறிக்கை | 1.0 | https://www.ltimindtree.com/general-privacy-policy/ |
| 2. | LTIMindtree குக்கீ கொள்கை | 1.0 | https://www.ltimindtree.com/cookie-policy/ |

# உள்ளடக்கம்

பதிப்புரிமைத் தகவல் ... 2

திருத்த வரலாறு ... 2

குறிப்புரைகள் ... 2

1 அறிமுகம் ... 4

2 கொள்கை அறிக்கை ... 5

3 நோக்கு ... 5

4 வரையறைகள் ... 6

5 என்னென்ன தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்கள் செயலாக்கப்படுகின்றன மற்றும் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களை எப்படி சேகரிக்கிறோம் ... 11

6 எதற்காக மற்றும் எந்தச் சட்ட அடிப்படையில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குகிறோம்? ... 14

7 முக்கியத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குதல் ... 20

8 18 வயதிற்குட்பட்ட நபர்களின் தனிப்பட்ட தரவுகள் ... 20

9 நேரடிச் சந்தைப்படுத்துதலில் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களின் பயன்பாடு ... 21

10 நிகழ்வுகளும் முன்னெடுப்புகளும் ... 22

11 தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல்களைத் தக்கவைத்தல் மற்றும் அகற்றுதல் ... 22

12 எல்லை தாண்டிய பரிமாற்றம் ... 23

13 தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு ... 30

14 வடிவமைப்பில் தனியுரிமை ... 31

15 தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகள் ... 32

15.1 கலிபோர்னியா தனியுரிமைகள் ... 36

16 தானியக்க முடிவெடுத்தல் ... 38

17 மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தல் ... 38

18 மூன்றாம் தரப்பு இணையத்தளங்களுக்கு இணைப்புகள் ... 40

19 தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல் தரவுகளின் தரம் ... 40

20 தரவுச் செயலாக்கத்தில் மாற்றங்களை நிர்வகித்தல் ... 41

21 HIPPA தனியுரிமை மற்றும் பாதுகாப்புத் தேவைகள் ... 42

22 புகார்கள் மற்றும் குறைகளுக்கான தொடர்பு விவரங்கள் ... 44

23 CCTV கண்காணிப்பு ... 45

24 LTIMindtree நிறுவனங்களின் பட்டியல் ... 45

25 கொள்கை மாற்றங்கள் மற்றும் பதிப்பித்தல் ... 45

# அறிமுகம்

உங்கள் தனியுரிமை எங்களுக்கு முக்கியமானதாகும். LTIMindtree மற்றும் அதன் குழும நிறுவனங்கள் ("LTIMindtree"') எங்கள் இணையத்தளத்தைப் (www.LTIMindtree.com) பயன்படுத்தும்போது உங்கள் தனியுரிமையை மதிக்க உறுதிபூண்டுள்ளன. இந்த LTIMindtree உலகளாவிய தரவுத் தனியுரிமை கொள்கையானது உங்களைப் பற்றி எங்களால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் தனிப்பட்ட தரவுகளை (இதன் பொருள் கீழே வரையறுக்கப்பட்டுள்ளது) LTIMindtree இன் சேகரிப்பு, பயன்பாடு மற்றும் பகிர்வு ஆகியவற்றிற்குப் பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கான தேவைகளை வரையறை செய்கிறது.

தரவு உட்படுத்தப்படுபவர்களின் தனியுரிமைகளைப் பாதுகாப்பதும் அவர்களின் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதும் இப்போது ஒருவரின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது மற்றும் உலகின் பல பகுதிகளில் சட்டரீதியான தேவையாகவும் உள்ளது. ஒரு உலகளாவிய நிறுவனமான LTIMindtree தரவு உட்படுத்தப்படுபவர்களின் தனியுரிமையை மதிக்கிறது மேலும் பொருந்தும் தனியுரிமைச் சட்டங்கள் மற்றும் சட்டவாக்கங்களுக்கு ("தரவுத் தனியுரிமைச் சட்டங்கள்") இணங்க உறுதிபூண்டுள்ளது (இதில் பின்வருனவும் இன்னபிறவும் அடங்கும், EU பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை 2016/679 ("GDPR"), UK சட்டத்தில் தக்கவைக்கப்பட்ட படி ("UK GDPR") (இந்தக் கொள்கையில் GDPR எனக் குறிப்பிடப்படுவது UK GDPR ஐயும் உள்ளடக்கும்), கலிபோர்னியா தனியுரிமைகள் சட்டம், தனியுரிமைச் சட்டம் 1988 (ஆஸ்திரேலியா) ஆஸ்திரேலிய தனியுரிமைக் கொள்கைகள் (APP)உட்பட, தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2018 (UK), தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 உடன் படிக்கப்பட வேண்டியவை தகவல் தொழில் நுட்பம் (நியாயமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் முக்கியத் தனிப்பட்ட தரவுகள் அல்லது தகவல்கள்) விதிமுறைகள் 2011 மற்றும் தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்புச் சட்டம் 2012 (சிங்கப்பூர்), தனியார் தரப்புகள் வைத்திருக்கும் தனிப்பட்ட தரவுகள் பற்றிய கூட்டாட்சிச் சட்டம் மற்றும் அதன் ஒழுங்குமுறைகள் (மெக்சிகோ) (ஸ்பேனிஷ் மொழியில் அதன் சுருக்கம் "LFPDPPP), தரவுப் பாதுகாப்பிற்கான சுவிஸ் கூட்டாட்சி சட்டம் 1992 மற்றும் செப்டம்பர் 1, 2023 இல் உள்ள படி, தரவுப் பாதுகாப்பிற்கான சுவிஸ் கூட்டாட்சி சட்டம் 2020, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு குறித்த கூட்டாட்சி அரசாணை-சட்டம் எண். 45/2021 (UAE), தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்புச் சட்டம் 4 , 2013 (தென் ஆப்பிரிக்கா), கனேடிய தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு மற்றும் மின்னணு ஆவணங்கள் சட்டம் மற்றும் அதனைப் பெருமளவு ஒத்திருக்கும் மாகாணச் சட்டங்கள், தனிப்பட்ட தரவு (தனியுரிமை) அரசாணை Cap. 486 (ஹாங்காங்), தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்புச் சட்டம் ("PIPL") (சீனா), தனியுரிமைச் சட்டம் 1988 (Cth) (ஆஸ்திரேலியா) மற்றும் LTIMindtree இன் தரவுச் செயலாக்கம் மற்றும் வணிகச் செயல்பாடுகளுக்குப் பொருந்தும் அளவிற்குப் பிற பொருந்தும் தனியுரிமைச் சட்டங்கள்).

# கொள்கை அறிக்கை

இந்த உலகளாவிய கொள்கையானது நிறுவனத்தால் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் (இதன் பொருள் கீழே வரையறுக்கப்பட்டுள்ளது) செயலாக்கப்படும் போது LTIMindtree இன் செயல்முறைகளை விளக்குவதற்காக மற்றும் வரையறுப்பதற்காக பொதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உலகளாவிய கொள்கையானது நீங்கள் எங்களுக்கு வழங்கும், பிற மூலங்களிலிருந்து உங்களைப் பற்றி LTIMindtree உருவாக்கும், அல்லது பெறும் உங்கள் தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்களை LTIMindtree பொதுவாக எவ்வாறு சேகரிக்கிறது, பயன்படுத்துகிறது மற்றும் வெளிப்படுத்துகிறது மற்றும் அதனைச் செயலாக்குவதற்கான சட்ட அடிப்படை, மற்றும் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாக்க LTIMindtree நடைமுறைப்படுத்தியுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை விவரிக்கிறது. இது உங்கள் தனிப்பட்ட தரவுகள் தொடர்பில் உங்கள் உரிமைகள் பற்றிய தகவல்களையும் நீங்கள் அறிய வேண்டிய பிற தொடர்புடைய விவரங்களையும் வழங்குகிறது. LTIMindtree இந்தக் கொள்கையில் பிரதிபலிக்கப்படாத தயாரிப்பு அல்லது சேவை சார்ந்த தரவுச் சேகரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து துணைக் கொள்கைகள் அல்லது அறிவிப்புகள் மூலம் தொடர்புடைய உங்கள் தனிப்பட்ட தரவுச் சேகரிப்பிற்கு முன்பாக உங்களுக்குத் தெரிவிக்கும்.

# நோக்கு

பொருந்தும்தன்மை: இந்த உலகளாவிய கொள்கையின் நோக்கு LTIMindtree, அதன் துணை நிறுவனங்கள், வணிகக் கூட்டாளிகள், ஊழியர்கள் மற்றும் LTIMindtree க்கு சேவை வழங்கும் மூன்றாம் தரப்புகளுக்கு (ஒட்டுமொத்தமாக "LTIMindtree", "நாங்கள்" அல்லது "எங்கள்) பொருந்தும். இது LTIMindtree இன் தற்போதைய மற்றும் முந்தைய ஊழியர்கள், எதிர்கால பணிதேடுபவர்கள், தற்போதைய, எதிர்கால மற்றும் முந்தைய வாடிக்கையாளர்கள், தற்போதைய மற்றும் முந்தைய கூட்டாளர்கள்/விற்பனையாளர்கள், இணையத்தளப் பார்வையாளர்கள், துணை-ஒப்பந்ததாரர்கள் மற்றும் பார்வையாளர்களின் (ஒட்டுமொத்தமாக "நீங்கள்"/ "உங்கள்) தனிப்பட்ட தரவுகளை LTIMindtree அதன் வணிகச் செயற்பாடுகளின் போது செயலாக்குவதைக் குறிப்பிடுகிறது. பாத்திரம்: உங்களைப் பற்றி வைத்திருக்கும் ஏதேனும் தனிப்பட்ட தரவுகளைப் பொருத்த வரை LTIMindtree ஒரு தரவுக் கட்டுப்பட்டாளராகச் செயல்படுகிறது. அதன் முழு முகவரி மற்றும் தொடர்பு விவரங்களை கீழே காணலாம்:

LTIMindtree Limited

கேட் எண். 5, L&T தொழில்நுட்ப மையம்,

சகி விகார் சாலை, போவாய்,

மும்பை – 400072,

இந்தியத் தொலைபேசி - +91 22 67766776

இணையத்தளம் - www.LTIMindtree.com

உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களுக்கு இணங்கி LTIMindtree பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவது LTIMindtree பொறுப்பாகும்.

தரவுக் கட்டுப்பாட்டாளராகச் செயல்படும் தொடர்புடைய நிறுவனங்கள் இந்தக் கொள்கையின் பிரிவு 24 இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

# வரையறைகள்

இந்தக் கொள்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன சில சொற்களின் பொருள்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

| சொல் | விளக்கம் |
|---|---|
| தனிப்பட்ட தரவு | இது அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய இயற்கையான நபர் ("தரவு உட்படுத்தப்படுபவர்")தொடர்பான எந்தவொரு தகவல்களையும் குறிக்கிறது; பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களின் கீழான எந்தவொரு தகவலும் தரவு உட்படுத்தப்படுபவரின் "தனிப்பட்ட தரவுகள்" அல்லது "தனிப்பட்ட தகவல்" ஆகும், இதில் அடையாளம் காணக்கூடிய இயற்கையான நபர் அவர் தான் என, பெயர், அடையாள எண், இருப்பிட தரவு, இணைய அடையாளங்காட்டி அல்லது அந்த இயற்கை நபரின் உடல், உடலியல், மரபியல், உளவியல், பொருளாதார, கலாச்சார அல்லது சமூக அடையாளத்தைக் குறிப்பிடும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகள் போன்ற அடையாளம் காட்டிகளை குறிப்பிடுவதன் மூலம் நேரடியாக அல்லது மறைமுகமாக, நியாயமான அளவில் அவருடன் தொடர்புபடுத்தக்கூடிய அல்லது இணைக்கக்கூடிய எந்தவொரு தகவல்களும் அடங்கும். இதில் கனேடிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்களில் உள்ள தனிப்பட்ட தகவல்களுக்கான வரையறையும் உள்ளடங்கும். தனியுரிமைச் சட்டம் 1988 (Cth) (ஆஸ்திரேலியா)இல் வரையறுக்கப்பட்ட படி தனிப்பட்ட தரவுக் என்பதில் "தனிப்பட்ட தகவல்களும்' அடங்கும்.<br><br>சீனாவில் குடியிருப்பவர்களைப் பொறுத்த வரை, தனிப்பட்ட தரவுகள் என்பதில் அநாமதேயமாக்கப்பட்ட தரவுகள் உள்ளடங்காது. LTIMindtree 14 வயதிற்குட்பட்ட சீனாவில் குடியிருப்பவர்களின் தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்காது. |
| தனிப்பட்ட தகவல் (கலிபோர்னியாவில் குடியிருப்பவர்க | இதில் ஒரு குறிப்பிட்ட நுகர்வோர் அல்லது வீட்டை அடையாளம் காட்டும், தொடர்புடைய, விவரிக்கும், நியாயமான அளவில் தொடர்புபடுத்தக்கூடிய, அல்லது நியாயமான அளவில் இணைக்கக்கூடிய, கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் தொடர்பான தகவல்கள் அடங்கும், இதில் கூட்டாட்சி, மாகாண அல்லது உள்ளூர் அரசாங்கப் பதிவேடுகளில் சட்டப்படி கிடைக்கச் செய்யப்பட்ட தகவல்கள், மற்றும் |

<table>
<tr><td>ளுக்கும் மட்டும் பொருந்தும்) (US சட்டங்களின் கீழ்)</td><td colspan="5">CCPA இல் வரையறுக்கப்பட்ட படி “அடையாளம் நீக்கப்பட்ட” அல்லது “தொகுப்பு வாடிக்கையாளர் தகவல்களும்” உள்ளடங்காது. LTIMindtree 16வயதிற்குட்பட்ட கலிபோர்னியா குடியிருப்பாளர்களின் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதில்லை.</td></tr>
<tr><td rowspan="2">முக்கிய தனிப்பட்ட தரவுகள் (GDPRகீழ் தனிப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட வகைகள் உட்பட)</td><td colspan="5">GDPR சட்டவிதி 9(1)இன் படி, தனிப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட வகைகள் என்பது இன அல்லது இனக்குழுத் தோற்றம், அல்லது அரசியல் கருத்துக்கள், அல்லது மத அல்லது தத்துவ நம்பிக்கைகள், அல்லது தொழிற்சங்க உறுப்புரிமையை போன்றவற்றை வெளிப்படுத்தும் தனிப்பட்ட தரவுகள் செயலாக்கம், அல்லது ஒரு இயற்கை நபரை தனித்துவமாக அடையாளம் காணும் நோக்கத்திலான மரபியல் தரவுகள், பயோமெட்ரிக் தரவுகள் செயலாக்கம், அல்லது உடல் நலம் குறித்த தரவுகள் அல்லது இயற்கை நபரின் பாலியல் வாழ்க்கை அல்லது பால் நோக்குநிலை குறித்த தரவுகளைக் குறிக்கிறது. முக்கிய தனிப்பட்ட தரவுகள் என்பதில் தனியுரிமைச் சட்டம் 1988 (Cth) (ஆஸ்திரேலியா)இல் வரையறுக்கப்பட்ட ‘முக்கியத் தகவல்கள்’ என்பதும் உள்ளடங்கும்.</td></tr>
<tr><td>மெக்சிகோவிற்கு மட்டும்: முன்புள்ளவற்றுடன் கூடுதலாக, தரவு உட்படுத்தப்படுபவரின் வாழ்க்கையின் மிக அந்தரங்கங்களைத் தொடும், அல்லது பாகுபாட்டிற்கு வழிவகுக்கும் வகையில் தவறாகப் பயன்படுத்தக்கூடிய அல்லது தரவு உட்படுத்தப்படு</td><td>சுவிட்சர்லாந்திற்கு மட்டும்: “ஒரு இயற்கை நபரின் பாலியல் வாழ்க்கை அல்லது பால் நோக்குநிலை” என்பதன் வரையறையில் அந்தரங்கப் பகுதி (பாலியல் வாழ்க்கை/நோக்குநிலைக்குப் பதில்) , சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், நிர்வாக அல்லது குற்றவியல் விசாரணைகள், மற்றும் நிர்வாக அல்லது</td><td>சீனாவில் குடியிருப்பவர்களுக்கு மட்டும்: முன்புள்ளவற்றுடன் கூடுதலாக, இச்சொல்லில் தரவுகள் கசிவதால் அல்லது சட்டவிரோதமாக பயன்படுத்தப் படுவதால் ஓர் இயற்கை நபரின் தனிப்பட்ட கண்ணியத்தைப்</td><td>கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களைப் பொறுத்த வரை, முன்புள்ளவற்றுடன் கூடுதலாக, இச்சொல்லில் அரசாங்க அடையாள எண்கள், நிதிக்கணக்கு எண்கள் அல்லது நிதிக் கணக்கு அணுகல் விவரங்கள், துல்லியமான</td><td>டென்மார்க்கில் மட்டும்: சமூகப் பாதுகாப்பு எண்கள் மற்றும் குற்றவியல் விதிமீறல்கள் GDPR கீழ் முக்கிய தனிப்பட்ட வையாகக் கருதப்படவில்லை ஆனால் அவற்றிற்கென தனியான வகைப்பாடு உள்ளது. டேனிஷ்</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பவருக்குத் தீவிர ஆபத்தை உள்ளடக்கிய தனிப்பட்ட தரவுகளின் பிற எந்தவொரு வகைகளும் முக்கியத் தரவாகக் கருதப்படுகிறது. | குற்றவியல் தடைகளும் உள்ளடங்குகிறது. | பாதிக்கக்கூடிய அல்லது தனிப்பட்ட அல்லது சொத்துகளின் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்க வழிவகுக்கக்கூடிய, பயோமெட்ரிக் தகவல்கள், நிதிக் கணக்குகள், தனிப்பட இருப்பிடம் மற்றும் 14 வயதிற்குட்பட்ட சிறார்களின் தனிப்பட்ட தகவல்களும் அடங்கும். | புவியிருப்பிடம், மற்றும் LTIMindtree ஒரு நோக்குடைய பெறுநராக இல்லாத தகவல் தொடர்புகளின் உள்ளடக்கங்களும் அடங்கும். | தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவற்றைச் செயலாக்குவதற்கு குறிப்பிட்ட சட்ட அடிப்படை தேவையாகும். |
| செயலாக்கம், செயலாக்குகிறது, செயலாக்கப்பட்டது அல்லது செயலாக்குதல் | இது தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள், அல்லது தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களின் தொகுப்புகள் மீது செய்யப்படும், தானியக்க வழிமுறைகளில் அமைந்த அல்லது அமையாத, சேகரித்தல், பதிவுசெய்தல், ஒழுங்குபடுத்துதல், கட்டமைத்தல், சேமித்தல், தகவமைத்தல் அல்லது மாற்றுதல், திரும்பப்பெறுதல், ஆலோசித்தல், பயன்படுத்துதல், பரிமாற்றத்தின் மூலம் வெளிப்படுத்தல், பரப்புதல் அல்லது பிற வகைகளில் கிடைக்கச் செய்தல், வரிசைப்படுத்தல் அல்லது இணைத்தல், தடுத்தல், நீக்குதல் அல்லது அழித்தல் போன்ற எந்தவொரு செயல்பாடுகள் அல்லது செயல்பாடுகளின் தொகுப்புகளைக் குறிக்கிறது. | | | | |
| ஒப்புதல் | தங்களின் தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் மற்றும்/அல்லது முக்கியத் தனிப்பட்ட தரவுகளின் செயலாக்குதல் குறித்து தரவு உட்படுத்தப்படுபவரின் விருப்பங்களைக் குறிப்பிடும் சுதந்திரமாக வழங்கப்படும், குறிப்பிட்ட, தகவலறிந்த மற்றும் குழப்பமில்லாத ஏதேனும் குறிப்புகள் மற்றும் அவர் தொடர்புடைய தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் மற்றும்/அல்லது முக்கிய தனிப்பட்ட தரவுகளை செயலாக்குவதற்கான உடன்பாட்டை குறிப்பிடும் அறிக்கை அல்லது தெளிவான நேர்மறை செயல்பாடுகளைக் குறிக்கிறது. | | | | |

| | |
|---|---|
| தரவு உட்படுத்தப்படுபவர் | தனிப்பட்ட தரவுகள் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட இயற்கை நபர் (அதாவது, அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய இயற்கை).<br>சிறார்/மனநலக் குறைபாடு உடைய நபர் எனில், தரவு உட்படுத்தப்படுபவர் ஒரு சட்டப்பூர்வப் பிரதிநி அல்லது பெற்றோர் பொறுப்புடையவர்களால் (பெற்றோர்/காப்பாளர்) பிரதிநிதித்துவப்படுத்தப்படுவார்.<br>இந்தக் கொள்கையில் தெளிவுபடுத்தல் நோக்கத்திற்காக, "தரவு உட்படுத்தப்படுபவர்" என்பது LTIMindtree தற்போதைய மற்றும் முந்தைய ஊழியர்கள், எதிர்கால பணிதேடுபவர்கள், தற்போதைய, எதிர்கால மற்றும் முந்தைய வாடிக்கையாளர் நபர்கள், தற்போதைய மற்றும் முந்தைய கூட்டாளர்கள்/விற்பனையாளர் நபர்கள், இணையத்தளப் பார்வையாளர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் பார்வையாளர்களைக் குறிக்கிறது.<br>LTIMindtree பொதுவாக 18 வயதிற்குட்பட்ட தரவு உட்படுத்தப்படுபவர்களின் தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்காது குறிப்பிட்ட விதிவிலக்குகள் தவிர (பார்க்க பிரிவு 8).<br>CCPA நோக்கத்திற்காக, தரவு உட்படுத்தப்படுபவர்கள் என்பது கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களையும் உள்ளடக்கும்.<br>சீனாவில் குடியிருப்பவர்களைப் பொறுத்த வரை, LTIMindtree 14 வயதிற்குட்பட்ட சீனாவில் குடியிருப்பவர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்காது. |
| தரவுக் கட்டுப்பாட்டாளர் | தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குவதற்கான நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளைத் தனியாக அல்லது மற்றவர்களுடன் கூட்டாகத் தீர்மானிக்கும் இயற்கை அல்லது சட்டரீதியான நபர், நிறுவனம், பொது அதிகார அமைப்பு, முகமை, அல்லது பிற குழுமங்களைக் குறிக்கிறது; இதில் அத்தகைய செயலாக்கத்திற்கான நோக்கங்கள் மற்றும் வழிமுறைகள் தேசிய மற்றும் பொருந்தும் சட்டங்களால் தீர்மானிக்கப்படுகின்றன, கட்டுப்பாட்டாளர் அல்லது அதன் நியமனத்திற்கான குறிப்பிட்ட வரையறையானது தேசிய அல்லது பொருந்தும் சட்டங்களால் வழங்கப்படலாம். |
| தரவு | தரவுக் கட்டுப்பாட்டாளர் சார்பாக தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கும் இயற்கை அல்லது சட்டரீதியான நபர், நிறுவனம், பொது அதிகார அமைப்பு, முகமை, அல்லது பிற குழுமங்களைக் குறிக்கிறது |
| மூன்றாம் தரப்பு | தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள் தொடர்பில் மூன்றாம் தரப்பு என்பது தரவு உட்படுத்தப்படுபவர், கட்டுப்பாட்டாளர், செயலாக்குபவர் மற்றும் நபர்கள் அல்லாத தரவு கட்டுப்பாட்டாளர் அல்லது தரவு செயலாக்குபவர் நேரடி அதிகாரத்தின் கீழ் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்க அங்கீகரிக்கப்பட்ட இயற்கை |

| | |
|---|---|
| | அல்லது சட்டரீதியான நபர், நிறுவனம், பொது அதிகார அமைப்பு, முகமை, அல்லது பிற குழுமங்களைக் குறிக்கிறது; |
| "விற்க," "விற்றல்," "விற்பனை," அல்லது "விற்கப் பட்டது," | இது நுகர்வோரின் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களை ஒரு வணிகத்திலிருந்து மற்றொரு வணிகத்திற்கு அல்லது மூன்றாம் தரப்பிற்கு பணம் அல்லது பிற மதிப்புமிக்க கருதுதல்களுக்காக, வாய்மொழியாக, எழுத்துமூலம் அல்லது மின்னணு அல்லது பிற வழிமுறைகளில் விற்றல், வாடகைக்கு விடுதல், விடுவித்தல், வெளிப்படுத்தல், பரப்புதல், கிடைக்கச் செய்தல் பரிமாற்றுதல், அல்லது தெரிவித்தல் போன்றவற்றைக் குறிக்கிறது. |
| "பகிர்" அல்லது "பகிர்தல்" (கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு மட்டும்) | கிராஸ்-காண்டெக்ஸ்ட் நடத்தை விளம்பரப்படுத்தலுக்காக, பணம் அல்லது பிற மதிப்புமிக்க கருதுதல்களுக்காக அல்லது அவை இல்லாமல், நுகர்வோரின் தனிப்பட்ட தகவல்களை வணிகத்திலிருந்து மூன்றாம் தரப்புக்கு வாய்மொழியாக, எழுத்துமூலம் அல்லது மின்னணு அல்லது பிற வழிமுறைகளில் பகிர்தல், வாடகைக்கு விடுதல், விடுவித்தல், வெளிப்படுத்தல், பரப்புதல், கிடைக்கச் செய்தல் பரிமாற்றுதல், அல்லது தெரிவித்தல் போன்றவற்றைக் குறிக்கிறது, இதில் பணப் பரிமாற்றம் எதுவும் இல்லாத ஒரு வணிகத்தின் நன்மைக்காக கிராஸ்-காண்டெக்ஸ்ட் நடத்தை விளம்பரப்படுத்தலுக்காக வணிகத்திலிருந்து மூன்றாம் தரப்புக்கான பரிவர்த்தனைகளும் உள்ளடங்கும். |
| "பாதுகாக்கப்பட்ட உடல்நலத் தகவல்கள்" அல்லது "PHI" (US சட்டங்களின் கீழ்) | பாதுகாக்கப்பட்ட நிறுவனம் அல்லது பாதுகாக்கப்பட்ட நிறுவனத்தின் வணிகக் கூட்டாளரால் உருவாக்கப்பட்ட மற்றும்/அல்லது அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் எழுத்து, வாய்மொழி, அல்லது மின்னணு உடல்நலத் தகவல்களைக் குறிக்கிறது;<br><br>PHI என்பதில் பின்வருதில் ஏதேனும் ஆவணங்கள் மட்டுமல்லாத இன்ன பிறவும் அடங்கும், அந்த ஆவணம் ஒரு தனிநபரின் அடையாளம் மற்றும் தனிநபரின் உடல் நிலை அல்லது பணம் செலுத்துதல் விவரங்களை வெளிப்படுத்தினால்:<br><br>• மருத்துவப் பதிவேடுகள் (மருத்துவ அட்டவணைகள் அல்லது மருத்துவர் குறிப்புகள் போன்றவை);<br><br>• மருத்துவ இரசீதுகள் (மருத்துவமனை அல்லது மருத்துவர் சேவைகளுக்கான இரசீதுகள் போன்றவை);<br><br>• கிளைம் தரவுகள் (தனிநபரின் சார்பாக திட்டங்களின் மூலம் கிளைம் பணம் செலுத்தப்பட்ட தரவுகள் போன்றவை); மற்றும்<br><br>• காப்பீடு பணம்செலுத்துகை தகவல்கள் (நன்மைகளின் விளக்கம் போன்றவை). |

| | |
|---|---|
| “தனிநபர்” (US சட்டங்களின் கீழ்) | பாதுகாக்கப்பட்ட உடல்நலத் தகவல்களுக்கு உட்பட்ட நபரைக் குறிக்கிறது. |
| “பாதுகாக்கப்பட்ட நிறுவனம்” (US சட்டங்களின் கீழ்) | மருத்துவம் & மனிதச் சேவைகள் துறையால் (“HHS”) உருவாக்கப்பட்ட தரநிலைகளின் படி மின்னணு வடிவில் PHI ஐ அனுப்பும் ஏதேனும் மருத்துவத் திட்டம் அல்லது ஏதேனும் மருத்துவசேவை கிளியரிங்ஹவுஸ் அல்லது ஏதேனும் மருத்துசேவை வழங்குநரைக் குறிக்கிறது. |
| “வணிகக் கூட்டாளர்” (US சட்டங்களின் கீழ்) | PHIஇன் பயன்பாடு அல்லது வெளிப்படுத்தல் தொடர்பான செயல்பாடு அல்லது சேவையைச் செய்யும் அல்லது பாதுகாக்கப்பட்ட நிறுவனத்திற்கு உதவும் நிறுவனத்தைக் குறிக்கிறது. வணிகக் கூட்டாளர்கள் என்ற சொல் PHI தொடர்பான செயல்பாடுகளைச் செய்யும் வணிகக் கூட்டாளரின் துணை ஒப்பந்தததாரர்களுக்கும் பொருந்தும். |
| “மின்னணு ஊடகம்” | என்பது இவற்றைக் குறிக்கிறது:<br><br>• தரவுகள் பதிவுசெய்யப்படும் அல்லது பதிவுசெய்யப்படக்கூடிய மின்னணு சேமிப்பு சாதனம், இதில் கணினியிலுள்ள சாதனங்கள் (எ.கா. வன் தட்டுகள்), மற்றும் காந்த நாடா அல்லது வட்டு, ஒளி வட்டு, அல்லது டிஜிட்டல் நினைவக அட்டை போன்ற எந்தவொரு நீக்கக்கூடிய/எடுத்துச் செல்லக்கூடிய டிஜிட்டல் நினைவக ஊடகங்கள்; அல்லது<br><br>• ஏற்கனவே மின்னணு சேமிப்பு ஊடகத்தில் உள்ள தகவல்களை பரிமாற்றப் பயன்படும் பரிமாற்ற ஊடகம். பரிமாற்ற ஊடகம் என்பதில், இண்டர்நெட் (இணையம்), எக்ஸ்ட்ரா நெட், இண்டிராநெட், லீஸ்ட் இணைப்புகள், டயலப் இணைப்புகள், தனியார் நெட்வொர்க்குகள், மற்றும் நீக்கக்கூடிய/ எடுத்துச்செல்லக்கூடிய மின்னணு சேமிப்பு சாதனங்களை நேரடியாகக் கொண்டு செல்லுதல் போன்றவை உள்ளடங்கும். பரிமாற்றம் செய்யப்படும் தகவல்கள் பரிமாற்றத்திற்கு முன் மின்னணு வடிவில் இல்லாவிட்டால் அதாவது காகிதம், தொலைபேசியில் குரல்வழியாகச் செய்தல், பேசிமல் போன்ற சில குறிப்பிட்ட பரிமாற்றங்கள் மின்னணு ஊடகப் பரிமாற்றங்களாகக் கருதப்படுவதில்லை. |

பொருந்தக்கூடிய வரையறைகளுக்கு தொடர்புடைய அதிகார எல்லைக்கான குறிப்பிட்ட தரவுத் தனியுரிமைச் சட்டங்களைப் பாருங்கள்.

## என்னென்ன தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்கள் செயலாக்கப்படுகின்றன மற்றும் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள்/தகவல்களை எப்படி சேகரிக்கிறோம்

நாங்கள் உங்களைப் பற்றி பின்வரும் தனிப்பட்ட தரவுகள் / தனிப்பட்ட தகவல்களை பின்வருமாறு சேகரித்து செயலாக்குவோம்:

| தரவு உட்படுத்தப்படுபவர்களின் வகைகள் | நாங்கள் உங்கள் தரவை எப்படி சேகரிக்கிறோம் |
|---|---|
| திட்டங்களில் உள்ள வாடிக்கையாளர் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள், இதில் பின்வருன மட்டுமல்லாது இன்ன பிறவும் அடங்கும், அடையாளத் தரவுகள் (முழு பெயர், உங்கள் சட்டப்பூர்வ பிரதிநிதியின் பெயர், கையொப்பம், ID, தேசிய அடையாள ID /எண்), தொடர்புத் தரவுகள் (முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்), வரித் தரவுகள் (வரி இருப்பிடம், வரி பதிவு எண்); நிதித் தரவுகள் (வங்கிக் கணக்கு எண், அட்டை எண்); உங்கள் தொழில்/ வணிக நடவடிக்கை தொடர்பான தகவல்கள் | LTIMindtree உங்களுக்குச் சேவைகள் வழங்கும் போது நேரடியாக உங்களிடமிருந்து. |
| வணிகக் கூட்டாளர்/விற்பனையாளர் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள், இதில் அடையாளத் தரவுகள் (முழு பெயர், உங்கள் சட்டப்பூர்வ பிரதிநிதியின் பெயர், கையொப்பம், ID, தேசிய அடையாள ID /எண்), தொடர்புத் தரவுகள் (முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்), வரித் தரவுகள் (வரி இருப்பிடம், வரி பதிவு எண்); நிதித் தரவுகள் (வங்கிக் கணக்கு எண்); உங்கள் தொழில்/ வணிக நடவடிக்கை தொடர்பான தகவல்கள் அடங்கும். | LTIMindtree உங்களிடமிருந்து சேவைகளைப் பெறும் போது நேரடியாக உங்களிடமிருந்து. |
| எதிர்கால பணிதேடுபவர்கள், இதில் அடையாளத் தரவுகள் (பெயர், வயது, பாலினம், திருமண நிலை, கையொப்பம், புகைப்படம், தேசிய அடையாள ID / எண்); தொடர்புத் தரவுகள் (முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்); CV; பணி வரலாறு; படிப்பு வரலாறு; நிதித் தரவுகள்(சமூகப் பொருளாதார ஆய்வு,); பின்னணி சரிபார்ப்பில் பெறப்பட்ட குற்றத் தரவுகள், கடன் வரலாறு போன்ற தகவல்கள் (சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட இடங்களில்) இவை முக்கியத் தரவுகளாகக் கருதப்படலாம்; உங்கள் ஆளுமை மற்றும் திறன்கள் பற்றிய தகவல்கள்; | நீங்கள் இணையத்தளத்தின் வழியே நேரடியாக விண்ணப்பித்திருந்தால் நேரடியாக உங்களிடமிருந்து;<br><br>மூன்றாம் தரப்புகள் அல்லது பிற மூலங்களிலிருந்து (எடுத்துக்காட்டாக ஆட்சேர்ப்பு முகமைகள் அல்லது LTIMindtree ஊழியர் பரிந்துரை ஆனால் ஒவ்வொரு நேர்விலும் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மட்டும் மற்றும் நியமிக்கப்படும் பதிவிக்குத் தேவையான அளவிற்கு மட்டும்), இதில் |

| | |
|---|---|
| தனிப்பட்ட மற்றும் வேலை குறிப்புரைகள் போன்றவை அடங்கும். | தொழில்முறை நெட்வொர்கிங் தளங்கள் அல்லது ஜாப் போர்ட்டல்கள் போன்ற பொது மூலங்களும் அடங்கலாம். |
| ஊழியர் தரவுகள், இதில் அடையாளத் தரவுகள் (பெயர், வயது, பாலினம், திருமண நிலை, கையொப்பம், புகைப்படம், தேசிய அடையாள ID / எண்); தொடர்புத் தரவுகள் (முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்); பணி வரலாறு; படிப்பு வரலாறு; நிதித் தரவுகள்(வங்கிக் கணக்கு எண், சம்பளம்); வேலையில் உங்கள் செயல்திறன் பற்றிய தரவுகள்; உடல்நலத் தரவு, முக்கியத் தரவாகக் கருதப்படுகிறது; வேலை உறவின் காரணத்தால் ஏற்படும் பிற தகவல்கள் போன்றவை அடங்கும். | வேலை வழங்கும் போது மற்றும் நீங்கள் வேலையிலிருக்கும் காலத்தில் நேரடியாக உங்களிடமிருந்து. |
| பார்வையாளர் தகவல்கள், இதில் அடையாளத் தரவுகள் (பெயர், கையொப்பம், புகைப்படம், தேசிய அடையாள ID / எண்); மற்றும் உங்கள் வருகையின் நோக்கம் தொடர்பான தகவல்கள் அடங்கும். | நீங்கள் எங்கள் வளாகத்திற்கு வரும் போது நேரடியாக உங்களிடமிருந்து அல்லது LTIMindtree ஊழியர் மூலம். |
| இணையத்தளக் குக்கீகள், இதில் உங்கள் சாதனத் தகவல்கள் மற்றும் உங்கள் வழிச்செலுத்துகை பழக்கங்கள் அடங்கும், இந்தத் தகவல்களில் சில தனிப்பட்ட தரவுகளாகக் கருதப்படலாம். | எங்கள் இணையத்தளக் குக்கீகள் மூலமாக நாங்கள் தகவல்களை எப்படிச் சேகரிக்கிறோம் என்ற தகவல்களுக்கு எங்கள் குக்கீ கொள்கையைப் பாருங்கள் - https://www.ltimindtree.com/cookie-policy/ . |
| சந்தைப்படுத்தல் தரவுகள், நிகழ்வுகளும் முன்னெடுப்புகளும் | நீங்கள் தொடர்பு கொள்ளும் போது (அல்லது நீங்கள் தொடர்பு கொள்ளப்படும்போது) நேரடியாக உங்களிடமிருந்து அல்லது LTIMindtree இணையத்தளம் வழியாக அல்லது தொலைபேசி, மின்னஞ்சல், இணைய போர்டல் வழியாக அல்லது நேரடியாக அல்லது Linkedin, Twitter போன்ற தொழில்முறை நெட்வொர்க்கிங் தளங்களிலிருந்து கலந்துகொண்ட நிகழ்வுகள் அல்லது கருத்தரங்குகள் அல்லது பட்டறைகள் அல்லது கருத்துக்கணிப்புகளில் ஏதேனும் LTIMindtree பிரதிநிதியுடன் ஊடாடும் போது நேரடியாக |

| | |
|---|---|
| | உங்களிடமிருந்து. |
| எதிர்கால வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகக்கூட்டாளர்கள்/ விற்பனையாளர்கள், இதில் அடையாளத் தரவுகள் (முழு பெயர், உங்கள் சட்டப்பூர்வ பிரதிநிதியின் பெயர், கையொப்பம், ID), தொடர்புத் தரவுகள் (முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்), வரித் தரவுகள் (வரி இருப்பிடம், வரி பதிவு எண்); நிதித் தரவுகள் (வங்கிக் கணக்கு எண்); உங்கள் தொழில்/ வணிக நடவடிக்கை தொடர்பான தகவல்கள் போன்றவை அடங்கும். | பிற வாடிக்கையாளர்/ வணிகக்கூட்டாளர் மற்றும் விற்பனையாளர் பரிந்துரையிலிருந்து. மேலும் "இணையத்தளத் தரவுகள்", "சந்தைப்படுத்தல் தரவுகள், நிகழ்வுகளும் முன்னெடுப்புக்களும்" ஆகியவற்றையும் பாருங்கள்". |

கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு மட்டுமே முன்புள்ளவற்றுடன், தனிப்பட்ட தகவல்களின் மூலங்களின் வகைகள் என்பதில் விளம்பரப்படுத்தல் வலைப்பின்னல்கள், இணைய சேவை வழங்குநர்கள், தரவுப் பகுப்பாய்வு வழங்குநர்கள், அரசாங்க நிறுவனங்கள், இயங்குதளம் மற்றும் அமைப்புகள், சமூக ஊடகங்கள், மற்றும் தரவுத் தரகர்களும் உள்ளடங்கலாம்.

## எதற்காக மற்றும் எந்தச் சட்ட அடிப்படையில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குகிறோம்?

உங்கள் தனிப்பட்ட தரவுகள் எங்களால் பின்வரும் வழிகளில் பின்வரும் சட்டப்பூர்வ நோக்கங்களுக்காகச் சேமிக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன:

- நீங்கள் எங்களிடம் வேலைக்காக விண்ணப்பித்திருக்கும் போது, எங்களிடம் உள்ள உங்கள் வேலை விண்ணப்பத்தை மதிப்பாய்வு செய்து செயலாக்குவதற்காக மற்றும் (சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் மற்றும் தொடர்புடைய பதவிக்கு உங்கள் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கு கண்டிப்பாகத் தேவைப்படும் இடங்களில்) உங்கள் மீது பின்னணி சரிபார்ப்புகளை நடத்த, இதில் உங்கள் முந்தைய வேலை, குற்ற தண்டனைகள், கல்வி, இரட்டை வேலைவாய்ப்பு மற்றும் பிற தொடர்புடைய சரிபார்ப்புகள் (பொருந்தும் சட்டத்தால் அனுமதிகப்படும் அல்லது தேவைப்படும் இடங்களில் மட்டும்) உள்ளடங்கும்.
- எங்களுடனான உங்கள் வேலை ஒப்பந்தம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக (இதில் உங்கள் சம்பளத்தை செயலாக்குதல், பலன்களை வழங்குதல், உங்கள் பதவி தொடர்பான பயிற்சிகளை நிர்வகித்தல் மற்றும் வழங்குதல் மற்றும் உங்கள் செயல்திறனை நிர்வகித்தில் போன்றவை அடங்கும்).
- எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்காக.
- நாங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய ஏதேனும் சட்டப்பூர்வ மற்றும் ஒழுங்குமுறை கடமைகளுக்கு இணங்குவதற்காக.
- எங்கள் சட்டப்பூர்வ உரிமைகளை நிறுவ, பயன்படுத்த அல்லது பாதுகாக்க அல்லது சட்டரீதியான விசாரணை நோக்கங்களுக்காக.

- *நீங்கள் ஒரு ஊழியர் அல்லது எங்கள் வளாகத்திற்கு வருகை தரும் பார்வையாளராக இருக்கும் இடங்களில், எங்கள் வளாகம் மற்றும்/அல்லது தகவல் தொழில் நுட்ப அமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் மோசடி அல்லது அங்கீகரிக்கப்படாத நுழைவுகளிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் அவற்றின் உங்கள் பயன்பாட்டைப் பதிவு செய்வதற்காக மற்றும் கண்காணிப்பதற்காக (பொருந்தும் சட்டங்களால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு, மற்றும் பாதுகாப்புகளுடன்).*

- *எங்கள் முறையான வணிக நலன்களுக்காக, எடுத்துக்காட்டாக எங்கள் இணையத்தளத்தை இயக்குதல், எங்கள் வணிகத்தைத் திறம்பட நிர்வகிப்பதையும் இயக்குவதையும் மேலாண்மை செய்தல், நாங்கள் உங்களுக்கு வழங்கும் தயாரிப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை நடத்துதல் (பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களால் தேவைப்படும் உங்கள் கூடுதல் ஒப்புதலைப் பெறுவதற்கு உட்பட்டு), மூன்றாம் தரப்பு தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் உங்களுக்கான விளம்பரங்களை இலக்கு வைத்தல், மற்றும் எங்கள் வணிகத்தின் பாதுகாப்பை நிர்வகித்தல் போன்றவை ("முறையான வணிக நலன்கள்"). பொருந்தும் உள்ளூர் சட்டங்களின் கீழ் "முறையான வணிக நலன்கள்" என்பது செயலாக்குவதற்கான சட்டரீதியான அடிப்படையாக இல்லாத போது, நாங்கள் இந்த நோக்கங்களுக்காக உங்கள் தரவுகளைச் செயலாக்குவதற்கு உங்கள் ஒப்புதலைச் சார்ந்திருப்போம்; மற்றும்*

- *உண்மையான அல்லது சாத்தியமான மோசடி அல்லது சட்ட விரோத செயல்பாடுகளைத் தடுப்பதற்காக மற்றும் எதிர்வினையாற்றுவதற்காக.*

- *உள்ளார்ந்த ஆராய்ச்சி: தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் விளக்கத்திற்கான உள்ளார்ந்த ஆராய்ச்சிக்காக நாங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்கலாம்.*

- *பரிவர்த்தனைகள்: வணிகத்தின் கட்டுப்பாட்டை ஒரு மூன்றாம் தரப்பு முழுமையாகவோ பகுதியாகவோ பெறுகின்றன இணைப்பு, கையகப்படுத்துதல், திவாலாதல் அல்லது பிற பரிவர்த்தனைகளின் போது நாங்கள் தனிப்பட்ட தகவல்களை ஒரு சொத்தாகப் பரிமாற்றம் செய்யலாம். அது போன்ற நிகழ்வுகளில், அந்த மூன்றாம் தரப்பு பெறப்பட்ட தனிப்பட்ட தகவல்களை பயன்படுத்தும் அல்லது வெளிப்படுத்தும் முறையை அடிப்படையில் மாற்ற முடியாது, சில விதிவிலக்குகள் உட்படும். மெக்சிக்கோவிற்கு, உங்கள் ஒப்புதல் தேவை. உங்கள் தனிப்பட்ட தகவல்களை எங்களுக்கு வழங்குவதன் மூலம் மற்றும் எங்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம்/வேலைக்காக விண்ணப்பிப்பதன் மூலம் அல்லது எங்களுடன் சட்டரீதியான உறவைத் தொடர்வதன் மூலம், நீங்கள் இந்தப் பரிமாற்றத்திற்கு ஒப்புக் கொள்கிறீர்கள். எனினும், பிரிவு 15 "தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகள்" இல் உள்ள நடைமுறைகளின் படி, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நீங்கள் "விலகிக் கொள்ளலாம்".*

*பொருந்தும் தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு ஏற்ப பின்வரும் சட்ட அடிப்படைகளின் அடிப்படையில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்குகிறோம்:*

a) *ஒப்பந்தத்தைச் செயல்படுத்துதல்: ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன் உங்கள் கோரிக்கையின் பேரில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவைப்படும் இடங்களில் அல்லது உங்களுடனான ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்காக நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட*

தகவல்களைச் செயலாக்குகிறோம். எடுத்துக்காட்டாக, வேலைவாய்ப்பு நோக்கங்களுக்காக (உங்கள் சம்பளத்தைச் செயலாக்குதல், பலன்களை நிர்வகித்தல் போன்றவை) அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தேவையான சேவைகளை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் போன்றவற்றிற்காக நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கலாம். இந்தச் சட்ட அடிப்படையின் கீழ் செயலாக்குவதற்காக நீங்கள் உங்கள் தனிப்பட்ட தரவை வழங்காவிட்டால், அதற்குரிய பொருந்தும் ஒப்பந்தத்தின் படி நாங்கள் செயல்பட இயலாமல் போகலாம்.

b) HR தேவை: தொழிலாளர் விதிமுறைகள் மற்றும் சட்டம் அல்லது சட்டப்படி கையெழுத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் படி உருவாக்கப்பட்ட LTIMindtreeஇன் ஊழியர்களுக்கான உள்ளார்ந்த ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்ட மனித வள மேலாண்மைக்கு தேவைப்படும் இடங்களில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கலாம்.

c) ஒப்புதல்: பொருந்தும் உள்ளூர் சட்டப்படி அனுமதிக்கப்படும் இடங்களில், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நீங்கள் முன்னர் வழங்கிய சுதந்திரமான ஒப்புதலின் அடிப்படையில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு, தனிப்பட்ட தகவல்கள் அல்லது முக்கிய தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கலாம் (ஆனால் நாங்கள் பொதுவாக இதனைச் செய்வதில்லை). அதுபோன்ற நேர்வுகளில், நீங்கள் இந்தக் கொள்கையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள (பிரிவு 22) தொடர்பு விவரங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் எந்த நேரத்திலும் உங்கள் ஒப்புதலைத் திரும்பப் பெற உரிமைகொண்டுள்ளீர்கள். சில வரம்பிடப்பட்ட சூழ்நிலைகளில், உங்கள் ஒப்புதலைத் திரும்பப் பெற்ற பின்னரும் கூட, பிற சட்ட அடிப்படைகள் மற்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதைத் தொடர்வதற்கு நாங்கள் உரிமை கொண்டிருக்கலாம். எனினும், குறிப்பிட்ட அதிகார எல்லைகளில், பொருந்தும் சட்டத்தின் படி ஒப்புதல் பெற வேண்டிய தேவை இருக்கலாம் அதுபோன்ற சூழ்நிலைகளில், உங்கள் ஒப்புதலே உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குவதற்கான சட்டரீதியான அடிப்படையாக இருக்கும்.

d) முறையான நலன்கள்: ஓர் நிறுவனமாக எங்களின் முறையான வணிக நலன்களின் நோக்கத்திற்காக தேவைப்படும் இடங்களில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்கலாம், இதில் மேலே விவரிக்கப்பட்ட மேலாண்மை நோக்கங்களுடன் உண்மையான அல்லது சாத்தியமான மோசடி அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்தல் அல்லது எதிர்வினையாற்றுதலும் அடங்கும், தனிப்பட்ட தரவுகளை பாதுகாக்க வேண்டியிருக்கும் தரவு உட்படுத்தப்படுபவர்களின் நலன்கள் அல்லது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் இத்தகைய நலன்களை இரத்து செய்யும் இடங்கள், குறிப்பாக தரவு உட்படுத்தப்படுபவர்கள் 18 வயதிற்குட்பட்டவராக இருப்பது, இதற்கு விதிவிலக்காகும். பொருந்தும் உள்ளூர் சட்டங்களின் கீழ் "முறையான நலன்கள்" என்பது செயலாக்குவதற்கான சட்டரீதியான அடிப்படையாக இல்லாத போது நாங்கள் உங்கள் ஒப்புதலைச் சார்ந்திருப்போம்.

e) சட்டப்பூர்வக் கடமைகள்: பொருந்தும் சட்டம் மற்றும்/அல்லது ஒழுங்குமுறைக் கடமைகளுக்கு இணங்குவதற்கு, எங்கள் சட்டப்பூர்வ உரிமைகளை நிறுவ, பயன்படுத்த அல்லது பாதுகாக்கத் தேவைப்படும் இடங்களில் அல்லது சட்டரீதியான விசாரணை நோக்கங்களுக்காக நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்கலாம்

f) பிற"பொது நலன்" அடிப்படைகள்: அரசாங்க அதிகாரிகள், ஒழுங்குமுறை அதிகாரிகள் அல்லது பொது நலனின் செயல்படும் ஏதேனும் பிற சட்ட அமலாக்க அதிகாரிகளினால் ஆணையிடப்பட்ட வேலையைச் செய்வதற்காக நாங்கள் தகவல்களைச் செயல்படுத்துவது தேவைப்படும் இடங்களில் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு உட்படும் இடங்களில் பொது நலன் அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் (அல்லது தொடர்புடைய இடங்களில், உங்கள் முக்கிய தனிப்பட்ட தரவுகளை) நாங்கள் செயலாக்கலாம்.

| தனிப்பட்ட தரவுகள் / தனிப்பட்ட தகவல்களின் வகைகள் | சேகரிப்பு நோக்கம் | சட்ட அடிப்படை |
|---|---|---|
| செயலாக்குபவர் / துணை-செயலாக்குபவர் பாத்திரத்தில் செயலாக்கப்பட இருக்கும் LTIMindtree வாடிக்கையாளரின் தரவுகள் / LTIMindtree உடன் வெளிப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களின் வாடிக்கையாளர் தரவுகள்; இதில் அடையாளத் தரவுகள்; தொடர்புத் தகவல்கள்; நிதித் தரவுகள்; முக்கியத் தரவு (உள்ளூர் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் இடங்களில்), உங்கள் தொழில்/ வணிகச் செயல்பாடு தொடர்பான தகவல்கள் போன்றவை அடங்கும். | செயலாக்குபவர் பாத்திரத்தில் LTIMindtreeஇன் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான சேவைகளை வழங்குதல். இந்தத் தரவுகள் LTIMindtree மற்றும் அதன் வாடிக்கையாளர்கள் இடையேயான ஒப்பந்தத்தில் கூறப்பட்டவற்றைத் தவிர்த்து வேறு எந்த நோக்கங்களுக்காகவும் வெளிப்படுத்தப்படாது/செயலாக்கப்படாது. | ஒப்பந்தத்தைச் செயல்படுத்துதல் |
| கட்டுப்பாட்டாளர் பாத்திரத்தில் செயலாக்கப்பட இருக்கும் LTIMindtree உடன் வெளிப்படுத்தப்பட்ட LTIMindtree வாடிக்கையாளரின் தரவுகள்; இதில் அடையாளத் தரவுகள்; தொடர்புத் தகவல்கள்; நிதித் | விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல், நிதி, இயக்கச் செயல்பாடுகள், தகவல் தொழில்நுட்ப அமைப்புகளின் நிர்வாகம், சட்டப்பூர்வக் கடமைகள் மற்றும் இணக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்காக, எல்லா அதிகாரப்பூர்வ தகவல் | வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான LTIMindtree இன் முறையான நலன்கள். |

| | | |
|---|---|---|
| தரவுகள்; முக்கியத் தரவு (உள்ளூர் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் இடங்களில்), உங்கள் தொழில்/ வணிகச் செயல்பாடு தொடர்பான தகவல்கள் போன்றவை அடங்கும். | தொடர்புகளுக்காக மற்றும் பிற எல்லா வணிக நோக்கங்களுக்காக. | |
| எதிர்கால வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள்/விற்பனையாளர்கள், இதில் அடையாளத் தரவுகள், தொடர்புத் தரவு, வரித் தரவு; நிதித் தரவு; உங்கள் தொழில்/வணிகச் செயல்பாடுகள் தொடர்பான தகவல்கள் அடங்கும். | ஏற்கனவே தொடர்பிலுள்ள எதிர்கால வாடிக்கையாளர்களுடன் தொடர்பைப் பராமரிக்க, LTIMindtree, வெபினார்கள், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை நடத்துவது பற்றி எதிர்கால வாடிக்கையாளர்களுடனான தகவல் தொடர்புகள். | ஒப்புதல், முறையான நலன்கள் (உள்ளூர் சட்டங்களால் அனுமதிக்கப்படும் இடங்களில்) |
| கூட்டாளர்/விற்பனையாளர்/ வாடிக்கையாளர் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள், இதில் அடையாளத் தரவு, தொடர்புத் தரவு (, வரித்தரவு; நிதித் தரவு; உங்கள் தொழில்/வணிகச் செயல்பாடுகள் தொடர்பான தகவல்கள் அடங்கும். | உங்களிடமிருந்து தயாரிப்புகளைப் பெறுவதற்காக விற்பனையாளர்/கூட்டாளரிடமிருந்து சேவைகளைப் பெறுதல். | கூட்டாளர்/விற்பனையாளர் உடனான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான LTIMindtree இன் முறையான நலன்கள் |
| எதிர்கால பணிதேடுபவர்களின் தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல்கள், இதில் அடையாளத் தரவு; தொடர்புத் தகவல்; நிதித் தரவு; முக்கியத் தரவுகள் (உள்ளூர் சட்டத்தால் அனுமதிக்கப்படும் இடங்களில்) அடங்கும். | வேலை வாய்ப்புகள்: நீங்கள் எங்களிடம் வேலைக்காக விண்ணப்பித்திருக்கும் போது, எங்களிடம் உள்ள உங்கள் வேலை விண்ணப்பத்தை மதிப்பாய்வு செய்து செயலாக்குவதற்காக மற்றும் (சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் மற்றும் தொடர்புடைய பதவிக்கு உங்கள் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கு | வேலைவாய்ப்புகள் மற்றும் ஆட்சேர்ப்புகளில் LTIMindtree இன் முறையான நலன்கள் /ஒப்புதல் (உள்ளூர் சட்டங்களின் கீழ் முறையான நலன் செயலாக்குவதற்கான |

| | | |
|---|---|---|
| | கண்டிப்பாகத் தேவைப்படும் இடங்களில்) உங்கள் பின்னணியைச் சரிபார்க்க, அனுமதிக்கப்படும் அல்லது தேவைப்படும் இடங்களில் மட்டும்). | சட்ட அடிப்படையாக இல்லாத போது) |
| ஊழியர் தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல்கள், இதில் அடையாளத் தரவு; தொடர்புத் தகவல்; நிதித் தரவு; முக்கியத் தரவு (உள்ளூர் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் இடங்களில்) அடங்கும். | வேலைவாய்ப்பு தொடர்பான செயல்பாடுகள்: எங்களுடனான உங்கள் வேலை ஒப்பந்தம் தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக. | ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல், சட்டப்பூர்வ கடமைக்கு இணங்குதல் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான செயல்பாடுகளில் LTIMindtree இன் முறையான நலன்கள் அல்லது ஒப்புதல் (மெக்சிகோவிற்குப் பொருந்தும்) |
| பார்வையாளர் தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல், இதில் அடையாளத் தரவு; மற்றும் உங்கள் வருகையின் நோக்கம் தொடர்பான தகவல்கள் அடங்கும். | பாதுகாப்பு நோக்கங்கள்: நீங்கள் எங்கள் வளாகத்திற்கு ஒரு பார்வையாளராக வருகை தரும் இடங்களில் எங்கள் வளாகம் மற்றும்/அல்லது IT அமைப்புகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் மோசடி அல்லது அங்கீகரிக்கப்படாத நுழைவுகளிலிருந்து அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் அவற்றின் உங்கள் பயன்பாட்டைப் பதிவு செய்வதற்காக மற்றும் கண்காணிப்பதற்காக. | பாதுகாப்பு நோக்கங்களுக்கான LTIMindtree இன் முறையான நலன்கள் அல்லது ஒப்புதல் (உள்ளூர் சட்டங்களின் கீழ் முறையான நலன் என்பது செயலாக்குவதற்கான சட்டப்பூர்வ அடிப்படையாக இல்லாத போது) |
| சந்தைப்படுத்தல் தரவு, அல்லது இணையத்தளம், முன்னெடுப்புகள் அல்லது கருத்துக்கணிப்புகள் மற்றும் நிகழ்வுகளின் பின்னணியில் தரவு உட்படுத்தப்படுபவர்களின் | சந்தைப்படுத்தல் நோக்கங்கள்: எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தல் மற்றும் வணிக மேம்பாட்டுச் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்காக. இதில் மின்னஞ்சல் மற்றும் SMS வழி சந்தைப்படுத்தல், பிற விளம்பரத் தகவல் தொடர்புகள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் ஆகியன | ஒப்புதல், (பொருந்தும் உள்ளூர் சட்டடங்களின் கீழ் அனுமதிக்கப்படும் போது) LTIMindtree இன் எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் தொடர்பான சந்தைப்படுத்தல் மற்றும் |

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட அல்லது தனிப்பட்ட தகவல்கள் | அடங்கும். எங்கள் இணையத்தளத்தை இயக்குதல், எங்கள் வணிகத்தைத் திறம்பட நிர்வகிப்பதையும் இயக்குவதையும் மேலாண்மை செய்தல், நாங்கள் உங்களுக்கு வழங்கும் தயாரிப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை நடத்துதல் மற்றும் எங்கள் வணிகத்தின் பாதுகாப்பை நிர்வகித்தல் போன்றவற்றிற்காக அதனைப் பயன்படுத்துதல். | வணிக மேம்பாட்டு செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான முறையான நலன்கள். |
| இணையத்தள குக்கீகள் | சந்தைப்படுத்தல் நோக்கங்கள்: நீங்கள் செயல்பாட்டைப் பயன்படுத்தும் போது அல்லது எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடும் போது, இதில், சட்டரீதியாக தேவைப்படும் இடங்களில் உங்கள் முன் ஒப்புதலைப் பெறுவதற்கு உட்பட்டு, எங்கள் இணையத்தளங்களில் குக்கீகளைப் பயன்படுத்துவதும் அடங்கும் (மேலும் தகவல்களுக்கு எங்கள் குக்கீ கொள்கையைப் பாருங்கள்). https://www.ltimindtree.com/cookie-policy/ | ஒப்புதல், முறையான நலன் (உள்ளூர் சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும் போது) |

## முக்கியத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குதல்

நாங்கள், சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட இடங்களில், GDPR சட்டவிதி 9 இன் படி பின்வரும் சட்டரீதியான அடிப்படையில் உங்கள் முக்கியத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குகிறோம்:

- மேலே விவரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக உள்ளூர் சட்டங்களின் கீழ் தேவைப்படும் இடங்களில் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வெளிப்படையான ஒப்புதல் அல்லது வெளிப்படையான எழுத்துப்பூர்வ ஒப்புதல் (பொருந்தும் இடங்களில்) உங்களிடமிருந்து பெறப்படுகிறது (GDPR சட்டவிதி 9(2)(a)).

- நீங்கள் உடலியல்ரீதியாக அல்லது சட்டரீதியாக ஒப்புதல் கொடுக்க இயலாத நிலையில் இருக்கும், ஆனால் உங்கள் அத்தியாவசியமான நலன்களைப் பாதுகாக்க செயலாக்குதல் அவசியமாக உள்ள இடங்களில் (GDPR சட்டவிதி 9(2)(b) GDPR). எடுத்துக்காட்டாக, அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் இடங்களில்.

- வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்கள் துறையில் கட்டுப்பாட்டாளர் அல்லது தரவு உட்படுத்தப்படுபவர்களின் கடமைகளைச் செய்தல் மற்றும் குறிப்பிட்ட உரிமைகளைச் செயல்படுத்துதல் நோக்கங்களுக்காக செயலாக்கம் அவசியமாக உள்ள போது உள்ளூர் தரவுத் தனியுரிமைச் சட்டங்களால் அல்லது தரவு உட்படுத்தப்படுபவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் நலன்களுக்கான பொருத்தமான பாதுகாப்புகளை வழங்கும் உள்ளூர் தரவுத் தனியுரிமைச் சட்டங்கள் அடிப்படையிலான கூட்டு ஒப்பந்தத்தால் அங்கீகரிப்பட்ட அளவிற்கு செயலாக்க (GDPR சட்டவிதி 9(2)(b)). உங்களுக்குப் பொருந்தும், முக்கியத் தனிப்பட்ட தரவுகளின் பெறுநர் வகைகளுக்கு இங்கு உள்ள தரவுத் தனியுரிமைக் கொள்கை அறிக்கையின் 'எங்களுடனான உங்கள் உறவின் அடிப்படையிலான தனியுரிமை அறிவிப்பைப்' பாருங்கள்.

## 18 வயதிற்குட்பட்ட நபர்களின் தனிப்பட்ட தரவுகள்

- நாங்கள் பயணம், குடிவரவு நோக்கங்களுக்காக அல்லது நீங்கள் எங்கள் வளாகங்களுக்கு வருகை தரும்போது மட்டுமே 18 வயதிற்குட்பட எந்தவொரு தனிநபர்களின் தனிப்பட்ட தரவுகள் அல்லது முக்கியத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குகிறோம். நாங்கள் அத்தகைய நபர்களின் தனிப்பட்ட தரவுகள் அல்லது முக்கியத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்க வேண்டியிருக்கும் போது, அவர்களின் சட்டப்பூர்வக் காப்பாளர்களிடமிருந்தும் வயது மற்றும் முதிர்ச்சி அடிப்படையில் ஒப்புதல் அளிக்கும் தகுதியிலிருந்தால் அந்தச் சிறார்களிடமிருந்தும் வெளிப்படையான ஒப்புதலைப் பெற்றே அவ்வாறு செய்வோம். நாங்கள் நேரடியாக 18 வயதிற்குட்பட்ட நபர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகள் அல்லது முக்கியத் தனிப்பட்ட தரவுகளை உள்நோக்கமின்றி சேகரித்தோம் அல்லது பெற்றோம் என்பது உங்கள் கவனத்திற்கு வந்தால், இந்தக் கொள்கையில் உள்ள தொடர்பு விவரங்களில் (கீழே பிரிவு 22) உடனடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள் அதற்கேற்ப நாங்கள் அத்தகைய தகவல்களை நீக்குவோம்.

குறிப்பு: நாங்கள் எங்கள் இணையத்தளத்தில் 18 வயதிற்குட்பட்ட நபர்களின் தனிப்பட்ட தரவுகளைச் சேகரிப்பதோ, பயன்படுத்துவதோ செயலாக்குவதோ இல்லை. நீங்கள் 18 வயதிற்குட்பட்டவர் எனில், நீங்கள் எங்கள் இணையத்தளத்தில் உங்கள் தனிப்பட்ட தரவுகள் எதையும் வழங்குவதை நாங்கள் விரும்பவில்லை.

## நேரடிச் சந்தைப்படுத்துதலில் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களின் பயன்பாடு

நேரடிச் சந்தைப்படுத்துதலுக்காக, நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களைப் பின்வரும் வழிகளில் பயன்படுத்துவோம் (பொருந்தும் உள்ளூர் சட்டங்களுடன் இணங்கும் அளவிற்கு).

a) உங்களுடனான உறவை நிர்வகிக்க மற்றும் பராமரிக்க, LTIMindtree மற்றும் தரவு உட்படுத்தப்படுபவர் இடையேயான உறவிற்குத் தேவையான அளவிற்கு உங்களின் விசாரணை, கேள்வி, அல்லது கருத்திற்கு பதிலளிப்பது உட்பட;

b) LTIMindtree மற்றும் தரவு உட்படுத்தப்படுபவர் இடையேயான உறவிற்குத் தேவையான அளவிற்கு LTIMindtree இன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவது மற்றும் விளம்பரப்படுத்துவது தொடர்பிலான சந்தைப்படுத்தல் மற்றும் வணிக மேம்பாட்டுச் செயல்பாடுகளில் ஈடுபட.

c) பிற நிறுவனங்களின் தளங்கள் அல்லது கைபேசி செயலிகளில் உங்கள் விருப்பங்களை இலக்கு வைத்து விளம்பரங்களை விநியோகிக்க;

d) நாங்கள் உங்களுக்கு வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்த மற்றும் எங்கள் வணிகத்தின் பாதுகாப்பை நிர்வகிக்க.

e) இந்த இணையத்தளத்தை மேம்படுத்துவதற்கான பகுப்பாய்வு மற்றும் சந்தை ஆராய்ச்சியை நடத்த

f) LTIMindtree மற்றும் தரவு உட்படுத்தப்படுபவர் இடையேயான உறவிற்குத் தேவையான அளவிற்கு, மின்னஞ்சல், SMS, தொலைபேசி மற்றும் அதைப் போன்ற தகவல் தொடர்பு வழிகளின் மூலம் எங்கள் சேவை வழங்கல்களைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க.

g) எங்களுக்குத் தகவல்களை வழங்கும் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் நாங்கள் மூன்றாம் தரப்பு நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக மூன்றாம் தரப்புடன் வெளிப்படுத்தியுள்ள அவர்களைப் பற்றிய தகவல்களைக் கோர உரிமை கொண்டுள்ளனர் (பொருந்தினால்), இதில் தகவல்களின் வகைகள் மற்றும் அந்த வணிகங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கும். நாங்கள் தற்போது கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களின் தனிப்பட்ட தகவல்களை அவர்களின் சொந்த நேரடிச் சந்தைப்படுத்துதலுக்காக மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்துவதில்லை.

நீங்கள் பிரிவு 16 "தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகளில்' குறிப்பிடப்பட்ட வழிகளைப் பயன்படுத்தி எந்த நேரத்திலும் செயலாக்கத்தின் தன்னார்வ நோக்கங்களிலிருந்து 'விலகலாம்'.

நேரடிச் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகள் செயலாக்கப்படும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவுகள் தொடர்பான அத்தகைய நேரடிச் சந்தைப்படுத்தல் நோக்கத்தை எந்த நேரத்திலும் மறுக்க நீங்கள் உரிமை கொண்டுள்ளீர்கள். GDPR இன் சட்ட விதி 21(2) மற்றும் (3)இல் விவரிக்கப்பட்ட படி அத்தகைய நோக்கங்களுக்காக தனிப்பட்ட தரவுகள் இனி செயலாக்கப்படுவதில்லை.

பொருந்தும் சட்டங்களால் தேவைப்படும் அளவிற்கு, நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளை எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கு எந்தவொரு சந்தைப்படுத்தல் நோக்கத்திற்காக கடத்தும் முன்பும் நாங்கள் உங்கள் ஒப்புதலைப் பெறுவோம். நீங்கள் மேற்கண்ட நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதற்கு உங்கள் ஒப்புதலை எங்களுக்கு வழங்கியிருந்தால், இந்தத் தனியுரிமைக் கொள்கையில் கீழே வழங்கப்பட்டுள்ள விவரங்களைத் தொடர்பு கொண்டு எந்த நேரத்திலும், கட்டணமில்லாமல், உங்கள் ஒப்புதலை விலக்கிக் கொள்ளலாம் மற்றும் திரும்பப் பெறலாம். உங்கள் விலகல் செயலாக்கப்பட்டு கூடிய விரைவில் நடைமுறைக்கு வரும்.

## நிகழ்வுகளும் முன்னெடுப்புகளும்

நாங்கள் நிகழ்வுகளையும் முன்னெடுப்புகளையும் ஏற்பாடு செய்கிறோம் மற்றும் பங்கேற்கிறோம். அத்தகைய நேர்வுகளில் ஒவ்வொரு நிகழ்வு தொடர்பில் வழங்கப்பட்ட பிற எந்தவொரு துணைத்தகவல்களுடன் இந்தக் கொள்கையும் பங்கேற்பாளர்கள் மற்றும் பேச்சாளர்களுக்குப் பொருந்தும். அதுபோன்ற நிகழ்வுகளையும் முன்னெடுப்புகளையும் நடத்த அல்லது ஏற்பாடு செய்ய நாங்கள் ஏதேனும்

மூன்றாம் தரப்புகளை நியமித்தால், அத்தகைய மூன்றாம் தரப்புகளுடனான ஒப்பந்தக் கடமைகளின் கீழ் பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களுக்கு இணங்க உங்கள் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள் அந்த மூன்றாம் தரப்பிற்கு வெளிப்படுத்தப்படும். எனினும் தனிப்பட்ட தரவுகள்/தனிப்பட்ட தகவல்களை அந்த மூன்றாம் தரப்புகள் செயலாக்குவது அந்தத் தரப்புகளின் தனியுரிமைக் கொள்கைகள் மற்றும் எங்களுக்கு இடையேயான ஒப்பந்தக் கடமைகளின் படி நிர்வகிக்கப்படும்.

## தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல்களைத் தக்க வைத்தல் மற்றும் அகற்றுதல்

நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களை எவ்வளவு காலம் வைத்திருக்கிறோம் என்பது முதன்மையாக இவறைப் பொறுத்து மாறுகிறது:

- தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்காக இந்தக் கொள்கையில் அடையாளம் காணப்பட்ட நோக்கங்கள் – தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படும் வரை நாங்கள் தகவல்களை வைத்திருக்க வேண்டும்; மற்றும்
- சட்டப்பூர்வ கடமைகள் – நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களை வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச காலத்தை சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறை நிர்ணயிக்கிறது;
- தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களை அகற்றுதல் மிகக் கவனத்துடன் கையாளப்படும் மற்றும் தரவுகளை அகற்றுதலை நிர்வகிக்கும் உள்ளார்ந்த கொள்கைகளில் விவரிக்கப்பட்டுள்ள நியாயமான தரவுப் பாதுகாப்பு நடைமுறைகளின் படி நிர்வகிக்கப்படும்;
- LTIMindtree தக்கவைத்தல் கொள்கையில் குறிப்பிட்ட படி பொருந்தும் சட்டத்தின் படி ஆரம்பத்தில் சேகரிக்கப்பட்ட நோக்கத்திற்குத் தேவையான காலத்திற்கு மட்டுமே தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்கள் செயலாக்கப்படும்.

## எல்லை தாண்டிய பரிமாற்றம்

நாங்கள் லார்சன் அண்ட் டர்போ குரூப்பின் (www.larsentoubro.com) ஒரு பகுதியாக இருக்கிறோம், இது ஓர் பன்னாட்டு நிறுவனக் குழுமம் ஆகும். ஆகவே, நாங்கள் உங்களைக் குறித்த தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்களை LTIMindtree இயங்கும் நாடுகளுக்கு, குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்காவிற்குப் பரிமாற்றுகிறோம் (LTIMindtree இன் SaaS அடிப்படையிலான சேவை வழங்குநர்கள் இருக்கும் இடங்கள்). நாங்கள் மேலே விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக எங்கள் குழும துணை நிறுவனங்கள் மற்றும் தரவு மையங்களுக்கு இடையே தனிப்பட்ட தரவுகளைப் பரிமாற்றுகிறோம். இந்தத் தரவுப் பரிமாற்றங்கள் எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்க அவசியமானவை ஆகும். மேலும் நாங்கள் அறிய வேண்டிய தேவை அடிப்படையில் எங்கள் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு சப்ளையர்கள், அல்லது LTIMindtree வாடிக்கையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வணிகக் கூட்டாளர்களுக்கு தனிப்பட்ட தரவுகளைப் பரிமாற்றலாம்.

மெக்சிக்கோவைப் பொறுத்த வரை, உங்களுடனான எங்கள் சட்டரீதியான உறவினால் ஏற்படும் கடமைகளுக்கு இணங்குவதற்கு அவசியம் அல்லது இந்த மூன்றாம் தரப்புகள் தரவு செயலாக்குநர்களாகச் செயல்படுவது ஆகியவற்றைத் தவிர்த்து உங்கள் ஒப்புதல் தேவைப்படலாம். உங்கள் தனிப்பட்ட தரவுகளை எங்களுக்கு வழங்குவதன் மூலம் மற்றும் இணையத்தளத்தைப் பயன்படுத்துவதன் மூலம்/வேலைக்கு விண்ணப்பிப்பதன் மூலம் அல்லது எங்களுடனான சட்டரீதியான உறவைப் பேணுவதன் மூலம், உங்கள் ஒப்புதல் தேவைப்படும் இடங்களில் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பரிமாற்ற நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். எனினும், பிரிவு 15 “தரவு உட்படுத்துப்படுபவர்களின் உரிமைகள்” இல் உள்ள நடைமுறைகளின் படி குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நீங்கள் “விலகலாம்”.

உங்கள் அதிகார எல்லைக்கு வெளியே உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களை பரிமாற்றும் இடங்களில், அவை பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களுக்கு இணக்கமாக உள்ள வகையில் பாதுகாக்கப்பட்டு பரிமாற்றப்படுகிறது என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

ஐரோப்பிய பொருளாதரப் பகுதிக்கு (“EEA”) வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

பொருந்தும் சட்டத்திற்கு ஏற்ப தனிப்பட்ட தரவின் பரிமாற்றத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்குவோம், பின்வருனவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம்:

- பெறும் நாடு GDPR சட்டவிதி 45 இன் படி ஐரோப்பிய ஆணையத்தின் போதியதன்மை முடிவுகளின் அடிப்படையலான தரவுப் பாதுகாப்பைப் போதுமான அளவு வழங்குகிறது; அல்லது

- பெறும் நிறுவனம் GDPR சட்டவிதி 46 இல் குறிப்பிட்ட படி ஐரோப்பிய ஆணையத்தினால் அதன் <u>நடைமுறைப்படுத்தல் முடிவுகளில்</u> ஒப்புதலளிக்கப்பட்ட “நிலையான ஒப்பந்த விதிகளின்” அடிப்படையில் அமைந்த ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, அதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது. நீங்கள் கீழுள்ள தொடர்புத் தகவல்களைப் (பிரிவு 22) பயன்படுத்தி எங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் இந்த நிலையான ஒப்பந்த விதிகளைக் கோர உரிமை கொண்டுள்ளீர்கள்; மற்றும்

- பொருந்தும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களின் பரிமாற்றத்தைப் பாதுகாக்க கூடுதல் (தொழில்நுட்ப, ஒப்பந்த மற்றும்/ நிறுவன) நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்;

- GDPR சட்டவிதி 45(3) படி போதியதன்மை முடிவுகள், அல்லது GDPR சட்டவிதி 46 படி பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத போது, இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிகளும் அடங்கும், மூன்றாம் நாட்டிற்கு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கு தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றம் அல்லது பரிமாற்றத் தொகுப்புகள் பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றின் படி மட்டுமே நடைபெறும்:

- (a) போதியதன்மை முடிவு மற்றும் பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற பரிமாற்றங்களால் தரவு உட்படுத்தப்படுபவருக்கான சாத்தியமுள்ள இடர்கள் பற்றி தெரிவிக்கப்பட்ட பின்னர், முன்மொழியப்படும் பரிமாற்றத்திற்கு தரவு உட்படுத்தப்படுபவர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்;
- (b) தரவு உட்படுத்தப்படுபவர் மற்றும் கட்டுப்பாட்டாளர் இடையேயான ஒப்பந்தத்தைச் செயல்படுத்த அல்லது தரவு உட்படுத்தப்படுபவரின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்-ஒப்பந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (c) தரவு உட்படுத்தப்படுபவரின் நலனில் கட்டுப்பாட்டாளர் மற்றும் மற்றொரு இயற்கை அல்லது சட்டரீதியான நபர் இடையே முடிக்கப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (d) முக்கிய பொது நலன் காரணங்களுக்காக இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (e) சட்டப்பூர்வ உரிமைகோரல்களை நிறுவ, பயன்படுத்த அல்லது பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (f) தரவு உட்படுத்தப்படுபவர் உடல்ரீதியாக அல்லது சட்டரீதியாக ஒப்புதல் கொடுக்க இயலாத இடங்களில் தரவு உட்படுத்தப்படுபவர் அல்லது பிற நபர்களின் அத்தியாவசிய நலன்களைப் பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (g) ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின்படி பொதுமக்களுக்குத் தகவல் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மற்றும் பொதுமக்கள் அல்லது முறையான நலன்களை நிரூபிக்கக்கூடிய எந்தவொரு நபருடனும் ஆலோசிப்பதற்காக திறந்திருக்கும் ஒரு பதிவகத்திலிருந்து இந்தப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது, ஆனால் ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின் படி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் அந்தக் குறிப்பிட்ட நேர்வில் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கு மட்டும்.

GDPR சட்டவிதிகள் 45 அல்லது 46 அடிப்படையில் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியாத இடங்களில், இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிமுறைகளின் சட்டவிதிகளும் அடங்கும், மற்றும் மேலே குறிக்கப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கான விதிவிலக்குகள் எதுவும் பொருந்தாத இடங்களில், அந்தப் பரிமாற்றம் மீண்டும் மீண்டும் நடைபெறாது, வரம்புள்ள எண்ணிக்கையிலான தரவு உட்படுத்தப்படுபவர்களை மட்டுமே கொண்டுள்ளது, கட்டுப்பாட்டாளர் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்களின் நோக்கத்திற்கு அவசியமாகும் மேலும் தரவு உட்படுத்தப்படுபவர்களின் நலன்கள் அல்லது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களால் அது இரத்து செய்யப்படவில்லை, மேலும் கட்டுப்பாட்டாளர் அந்தத் தரவுப் பரிமாற்றத்தைச் சுற்றிய அனைத்து சூழ்நிலைகளையும் மதிப்பிட்டு அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பிற்காக பொருத்தமான பாதுகாப்பு அரண்களை வழங்கியுள்ளார் என்றால் மட்டுமே, மூன்றாம் நாடு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கான ஒரு பரிமாற்றம் நடைபெறலாம். கட்டுப்பாட்டாளர்

*பரிமாற்றம் குறித்து மேற்பார்வை அதிகாரியிடம் தெரிவிப்பார். கட்டுப்பாட்டாளர்* GDPR *சட்டவிதிகள் 13 மற்றும் 14 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குவதுடன் கூடுதலாக, இந்தப் பரிமாற்றம் மற்றும் தான் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்கள் குறித்தும் தரவு உட்படுத்தப்படுபவருக்குத் தெரிவிப்பார்.*

*ஐக்கிய இராச்சியத்திற்கு* ("UK") *வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:*

- *பெறும் நாடு* UK GDPR *சட்டவிதி* 45 *இன் படி அரசாங்கச் செயலாளரின் போதியதன்மை முடிவுகளின் அடிப்படையிலான தரவுப் பாதுகாப்பைப் போதுமான அளவு வழங்குகிறது; அல்லது*

- *பெறும் நிறுவனம்* UK ICO *ஆல் ஒப்புதலளிக்கப்பட்ட "பன்னாட்டு தரவுப் பரிமாற்ற ஒப்பந்தத்தின்" அடிப்படையிலான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, அதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது; மற்றும்*

- *பொருந்தும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றத்தைப் பாதுகாக்க கூடுதல் (தொழில்நுட்ப, ஒப்பந்த மற்றும்/ நிறுவன) நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்;*

- GDPR *சட்டவிதி* 45(3) *படி போதியதன்மை முடிவுகள், அல்லது* GDPR *சட்டவிதி 46 படி பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத போது, இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிகளும் அடங்கும், மூன்றாம் நாட்டிற்கு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கு தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றம் அல்லது பரிமாற்றத் தொகுப்புகள் பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றின் படி மட்டுமே நடைபெறும்:*
  - (a) *போதியதன்மை முடிவு மற்றும் பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற பரிமாற்றங்களால் தரவு உட்படுத்தப்படுபவருக்கான சாத்தியமுள்ள இடர்கள் பற்றி தெரிவிக்கப்பட்ட பின்னர், முன்மொழியப்படும் பரிமாற்றத்திற்கு தரவு உட்படுத்தப்படுபவர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்;*
  - (b) *தரவு உட்படுத்தப்படுபவர் மற்றும் கட்டுப்பாட்டாளர் இடையேயான ஒப்பந்தத்தைச் செயல்படுத்த அல்லது தரவு உட்படுத்தப்படுபவரின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்-ஒப்பந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;*
  - (c) *தரவு உட்படுத்தப்படுபவரின் நலனில் கட்டுப்பாட்டாளர் மற்றும் மற்றொரு இயற்கை அல்லது சட்டரீதியான நபர் இடையே முடிக்கப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;*
  - (d) *முக்கிய பொது நலன் காரணங்களுக்காக இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;*

- (e) சட்டப்பூர்வ உரிமைகோரல்களை நிறுவ, பயன்படுத்த அல்லது பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (f) தரவு உட்படுத்தப்படுபவர் உடல்ரீதியாக அல்லது சட்டரீதியாக ஒப்புதல் கொடுக்க இயலாத இடங்களில் தரவு உட்படுத்தப்படுபவர் அல்லது பிற நபர்களின் அத்தியாவசிய நலன்களைப் பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
- (g) ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின்படி பொதுமக்களுக்குத் தகவல் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மற்றும் பொதுமக்கள் அல்லது முறையான நலன்களை நிரூபிக்கக்கூடிய எந்தவொரு நபருடனும் ஆலோசிப்பதற்காக திறந்திருக்கும் ஒரு பதிவகத்திலிருந்து இந்தப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது, ஆனால் ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின் படி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் அந்தக் குறிப்பிட்ட நேர்வில் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கு மட்டும்.

GDPR சட்டவிதிகள் 45 அல்லது 46 அடிப்படையில் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியாத இடங்களில், இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிமுறைகளின் சட்டவிதிகளும் அடங்கும், மற்றும் மேலே குறிக்கப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கான விதிவிலக்குகள் எதுவும் பொருந்தாத இடங்களில், அந்தப் பரிமாற்றம் மீண்டும் மீண்டும் நடைபெறாது, வரம்புள்ள எண்ணிக்கையிலான தரவு உட்படுத்தப்படுபவர்களை மட்டுமே கொண்டுள்ளது, கட்டுப்பாட்டாளர் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்களின் நோக்கத்திற்கு அவசியமாகும் மேலும் தரவு உட்படுத்தப்படுபவர்களின் நலன்கள் அல்லது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களால் அது இரத்து செய்யப்படவில்லை, மேலும் கட்டுப்பாட்டாளர் அந்தத் தரவுப் பரிமாற்றத்தைச் சுற்றிய அனைத்து சூழ்நிலைகளையும் மதிப்பிட்டு அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பிற்காக பொருத்தமான பாதுகாப்பு அரண்களை வழங்கியுள்ளார் என்றால் மட்டுமே, மூன்றாம் நாடு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கான ஒரு பரிமாற்றம் நடைபெறலாம். கட்டுப்பாட்டாளர் பரிமாற்றம் குறித்து மேற்பார்வை அதிகாரியிடம் தெரிவிப்பார். கட்டுப்பாட்டாளர் GDPR சட்டவிதிகள் 13 மற்றும் 14 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குவதுடன் கூடுதலாக, இந்தப் பரிமாற்றம் மற்றும் தான் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்கள் குறித்தும் தரவு உட்படுத்தப்படுபவருக்குத் தெரிவிப்பார்.

சுவிட்சர்லாந்திற்கு வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

பொருந்தும் சட்டத்திற்கு ஏற்ப தனிப்பட்ட தரவுப் பரிமாற்றத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்குவோம், பின்வருனவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம்:

- பெறும் நாடு தரவுப் பாதுகாப்புகான கூட்டாட்சிச் சட்ட ஆணையின் படி செப்டம்பர் 1, 2023 நிலவரப்படி, மற்றும் FDPIC முடிவின் அடிப்படையிலான தரவுப் பாதுகாப்பைப் போதுமான அளவு வழங்குகிறது;

- பெறும் நிறுவனம் GDPR சட்டவிதி 46 இல் குறிப்பிட்ட படி ஐரோப்பிய ஆணையத்தினால் அதன் நடைமுறைப்படுத்தல் முடிவுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட "நிலையான ஒப்பந்த விதிகள்" மற்றும் FDPIC ஆல் ஒப்புதலளிக்கப்பட்ட நிலையான ஒப்பந்த விதிகளின் சுவிஸ் இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, அதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளது. நீங்கள் கீழுள்ள தொடர்புத் தகவல்களைப் (பிரிவு 22) பயன்படுத்தி எங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் இந்த நிலையான ஒப்பந்த விதிகளைக் கோர உரிமை கொண்டுள்ளீர்கள்; மற்றும்

- பொருந்தும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவு/தனிப்பட்ட தகவல்களின் பரிமாற்றத்தைப் பாதுகாக்க கூடுதல் (தொழில்நுட்ப, ஒப்பந்த மற்றும்/ நிறுவன) நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்;

- GDPR சட்டவிதி 45(3) படி போதியதன்மை முடிவுகள், அல்லது GDPR சட்டவிதி 46 படி பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத போது, இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிகளும் அடங்கும், மூன்றாம் நாட்டிற்கு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கு தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றம் அல்லது பரிமாற்றத் தொகுப்புகள் பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றின் படி மட்டுமே நடைபெறும்:
    - (a) போதியதன்மை முடிவு மற்றும் பொருத்தமான பாதுகாப்புகள் இல்லாத காரணத்தால் இதுபோன்ற பரிமாற்றங்களால் தரவு உட்படுத்தப்படுபவருக்கான சாத்தியமுள்ள இடர்கள் பற்றி தெரிவிக்கப்பட்ட பின்னர், முன்மொழியப்படும் பரிமாற்றத்திற்கு தரவு உட்படுத்தப்படுபவர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்;
    - (b) தரவு உட்படுத்தப்படுபவர் மற்றும் கட்டுப்பாட்டாளர் இடையேயான ஒப்பந்தத்தைச் செயல்படுத்த அல்லது தரவு உட்படுத்தப்படுபவரின் கோரிக்கையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்-ஒப்பந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
    - (c) தரவு உட்படுத்தப்படுபவரின் நலனில் கட்டுப்பாட்டாளர் மற்றும் மற்றொரு இயற்கை அல்லது சட்டரீதியான நபர் இடையே முடிக்கப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
    - (d) முக்கிய பொது நலன் காரணங்களுக்காக இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
    - (e) சட்டப்பூர்வ உரிமைகோரல்களை நிறுவ, பயன்படுத்த அல்லது பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;
    - (f) தரவு உட்படுத்தப்படுபவர் உடல்ரீதியாக அல்லது சட்டரீதியாக ஒப்புதல் கொடுக்க இயலாத இடங்களில் தரவு உட்படுத்தப்படுபவர் அல்லது பிற நபர்களின் அத்தியாவசிய நலன்களைப் பாதுகாக்க இந்தப் பரிமாற்றம் அவசியமாகும்;

- (g) ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின்படி பொதுமக்களுக்குத் தகவல் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மற்றும் பொதுமக்கள் அல்லது முறையான நலன்களை நிரூபிக்கக்கூடிய எந்தவொரு நபருடனும் ஆலோசிப்பதற்காக திறந்திருக்கும் ஒரு பதிவகத்திலிருந்து இந்தப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது, ஆனால் ஒன்றிய அல்லது உறுப்பு நாட்டின் சட்டத்தின் படி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் அந்தக் குறிப்பிட்ட நேர்வில் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கு மட்டும்.

GDPR சட்டவிதிகள் 45 அல்லது 46 அடிப்படையில் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியாத இடங்களில், இதில் கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிமுறைகளின் சட்டவிதிகளும் அடங்கும், மற்றும் மேலே குறிக்கப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கான விதிவிலக்குகள் எதுவும் பொருந்தாத இடங்களில், அந்தப் பரிமாற்றம் மீண்டும் மீண்டும் நடைபெறாது, வரம்புள்ள எண்ணிக்கையிலான தரவு உட்படுத்தப்படுபவர்களை மட்டுமே கொண்டுள்ளது, கட்டுப்பாட்டாளர் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்களின் நோக்கத்திற்கு அவசியமாகும் மேலும் தரவு உட்படுத்தப்படுபவர்களின் நலன்கள் அல்லது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களால் அது இரத்து செய்யப்படவில்லை, மேலும் கட்டுப்பாட்டாளர் அந்தத் தரவுப் பரிமாற்றத்தைச் சுற்றிய அனைத்து சூழ்நிலைகளையும் மதிப்பிட்டு அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பிற்காக பொருத்தமான பாதுகாப்பு அரண்களை வழங்கியுள்ளார் என்றால் மட்டுமே, மூன்றாம் நாடு அல்லது பன்னாட்டு நிறுவனத்திற்கான ஒரு பரிமாற்றம் நடைபெறலாம். கட்டுப்பாட்டாளர் பரிமாற்றம் குறித்து மேற்பார்வை அதிகாரியிடம் தெரிவிப்பார். கட்டுப்பாட்டாளர் GDPR சட்டவிதிகள் 13 மற்றும் 14 இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை வழங்குவதுடன் கூடுதலாக, இந்தப் பரிமாற்றம் மற்றும் தான் மேற்கொள்ள இருக்கும் கட்டாய முறையான நலன்கள் குறித்தும் தரவு உட்படுத்தப்படுபவருக்குத் தெரிவிப்பார்.

தென் ஆப்பிரிக்காவிற்கு வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்தவரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

- தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்புச் சட்டம் 4 , 2013 இன் கீழ் பின்பற்றப்படும் தேவைகளுக்குச் சமமான அல்லது இணையான முறையில் உங்கள் தனிப்பட்ட தரவுகள் / முக்கியத் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க கடமைப்படுத்தும் ஓர் ஒப்பந்தத்தை பெறும் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது; மற்றும்
- பொருந்தும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றத்தைப் பாதுகாக்க கூடுதல் (தொழில்நுட்ப, ஒப்பந்த மற்றும்/அல்லது நிறுவன) நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்;

சீன மக்கள் குடியரசிற்கு (“PRC”) வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

- பெறும் நிறுவனம் PRC சைபர் பாதுகாப்பு நிர்வாகம் வெளியிட்டுள்ள "மாதிரி நிலையான ஒப்பந்தத்தின்" அடிப்படையிலான ஓர் ஒப்பந்தத்தை LTIMindtree உடன் கையெழுத்திட்டுள்ளது;
- தனிப்பட்ட தரவுகளின் எல்லை தாண்டிய பரிமாற்றம் குறித்து நாங்கள் உங்கள் தனி ஒப்புதலைப் பெற்றுள்ளோம்;
- நாங்கள் தனிப்பட்ட தரவுகளின் எல்லை தாண்டிய பரிமாற்றத்திற்கான தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்பு தாக்க மதிப்பீட்டை நடத்தியுள்ளோம்;
- பொருந்தும் இடங்களில், தனிப்பட்ட தரவுகள் ஏற்றுமதியின் பாதுகாப்பு மதிப்பீட்டிற்கான எங்கள் விண்ணப்பத்திற்கு அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது; மற்றும்
- பொருந்தும் இடங்களில், உங்கள் தனிப்பட்ட தரவுகளின் பரிமாற்றத்தைப் பாதுகாக்க கூடுதல் (தொழில்நுட்ப, ஒப்பந்த மற்றும்/ நிறுவன) நடவடிக்கைகளை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்;

ஆஸ்திரேலியாவிற்கு வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

- உங்கள் தனிப்பட்ட தரவுகள் வெளிப்படுத்தப்படக்கூடிய வெளிநாட்டு அமைவிடங்களை நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம்;
- தனியுரிமைச் சட்டத்தின் அட்டவணை 1 இன் ஆஸ்திரேலிய தனியுரிமைக் கொள்கைகள் இத்தகைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதைப் போல, ஒட்டுமொத்தமாக, அல்லது குறைந்தபட்சம் பெருமளவு ஒத்த வழிகளில் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் அல்லது கட்டுப்படுத்தும் விதிகளைக் கொண்ட பகுதியில் தனிப்பட்ட தகவல்களின் மூன்றாம் தரப்பு பெறுநர் அமைந்துள்ளது மேலும் அதுபோன்ற சட்டங்கள் அல்லது கட்டுப்படுத்தும் விதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் உங்களுக்குக் கிடைக்கின்றன; மற்றும்/அல்லது
- வெளிநாட்டுப் பெறுநர் ஆஸ்திரேலிய தனியுரிமைக் கொள்கைகளை மீறவில்லை என்பதை உறுதிப்படுத்த நியாயமான நடவடிக்கைகள் எடுத்தல்.

பிற அதிகார எல்லைகளுக்கு வெளியே பரிமாற்றங்களைப் பொறுத்த வரை, நாங்கள் இதனை உறுதிப்படுத்துவோம்:

- அதன் தரவு ஏற்றுமதிக் கிளை மற்றும் அதன் தரவு இறக்குமதிக் கிளைக்கு இடையே பொருத்தமான பொறுப்புகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு பொருந்தும் தனியுரிமைச் சட்டங்களுக்கு ஏற்ப தொடர்புடைய தரவுச் செயலாக்க ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கையில் பிரிவு 22 இல் குறிப்பிடப்பட்ட விவரங்களைப் பயன்படுத்தி எங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் தரவு / தனிப்பட்ட தகவல்கள் உங்கள் அதிகார எல்லைக்கு வெளியே

பரிமாற்றப்படும் போது அதற்குக் கொடுக்கப்படும் பாதுகாப்பு பற்றிய கூடுதல் விவரங்களை (இதில் மாதிரி ஒப்பந்த விதிமுறைகள் & பாதுகாப்புகளின் நகலும் அடங்கும்) நீங்கள் பெற முடியும்.

## தனிப்பட்ட தரவு / தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு

பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களின் கீழ் எங்கள் தரவுப் பாதுகாப்புக் கடமைகளுக்கு இணங்குவதற்காக, பொருந்தும் தொழில் துறை தரநிலைகள், நடைமுறைப்படுத்தும் செலவு மற்றும் இயல்பு, நோக்கு, பின்னணி மற்றும் செயலாக்குவதின் நோக்கம் அத்துடன் உங்கள் உரிமைகள் சுதந்திரங்கள் மாறுபடக்கூடிய சாத்தியக்கூறு மற்றும் தீவிரத்தன்மையின் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு உங்கள் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்கள் மற்றும் PHI இன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் பொருள்ரீதியான, தொழில் நுட்ப மற்றும் நிறுவனப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றியுள்ளோம்:

- இதில் தரவுகளின் இயல்பு மற்றும் மனிதச் செயல்பாடு அல்லது பருப்பொருள் அல்லது இயற்கைச் சூழ்நிலை காரணமாக அவை வெளிப்படுத்தப்படும் ஆபத்துகளைக் கருத்தில் கொண்டு அவற்றின் மாற்றம், சேதம், இழப்பு, அங்கீகரிக்கப்படாத செயலாக்கம் அல்லது அணுகலைத் தடுப்பதும் அடங்கும்.
- நாங்கள் உள்ளார்ந்த I.T துறையுடன் ஆலோசித்து எங்கள் ஒப்பந்த மற்றும் சட்டரீதியான தேவைகளின் படி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்குவோம்.
- தரவுத் தனியுரிமை அலுவலகம் மற்றும் முதன்மை தகவல் பாதுகாப்பு அதிகாரி தனிப்பட்ட தரவு, தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை வழக்கமான முறையில் மதிப்பீடு செய்து தேவைப்படும் இடங்களில் புதுப்பிப்பார்.
- ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததார்கள் அனைவருக்கும் கட்டாய தனியுரிமைப் பயிற்சி வழங்கப்படும் (எ.கா. மென்பொருள் உருவாக்கத்தில் தனியுரிமையை உட்பொதிப்பதற்கான பயிற்சி போன்றவை). அவர்கள் LTIMindtreeஇல் சேரும் போது அல்லது சேர்வதற்கு முன் அனைத்து ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களாலும் கூடுதல் இரகசியத்தன்மை ஒப்பந்தங்கள் மற்றும் வெளிப்படுத்தாமை ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும்.
- நாங்கள் சேகரிக்கும், சேமிக்கும், செயலாக்கும் மற்றும் வெளிப்படுத்தும் தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்த பின்வரும் பாதுகாப்புகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம்:
    - பொருள்ரீதியான பாதுகாப்புக் கட்டுப்பாடுகள்
        - இடங்களைச் சுற்றிப் பாதுகாப்பு, HD அணுகல் ரீடர், தரவு மையம், வீடியோ கண்காணிப்பு
    - IT உட்கட்டமைப்புக் கட்டுப்பாடுகள்
        - மறைகுறியாக்கம், DLP, தரவு மறைப்பு, கட்டுப்படுத்தப்பட்ட போர்டபிள் போர்ட்டுகள், அணுகல் கட்டுப்பாடு, அங்கீகரிக்கப்படாத மென்பொருள் பாதுகாப்பு, தரவை அழித்தல், அமைப்பு சுகாதர நடவடிக்கைகள், கண்காணித்தல், பயனர் அணுகல் மேலாண்மை, பேட்ச் நிர்வாகம், பாதிப்பு சாத்தியங்கள் நிர்வாகம்.

தரவுத் தனியுரிமை இணக்கத்திலுள்ள விதிவிலக்குகள் உடனடியாக தரவுத் தனியுரிமை அலுவலகம் மற்றும் நியமிக்கப்பட்ட தரவுப் பாதுகாப்பு அதிகாரிக்கு அறிக்கையளிக்கப்படுவதை உறுதிப்படுத்த நாங்கள் நிகழ்வு மற்றும் மீறல் மேலாண்மைச் செயல்முறையை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

## வடிவமைப்பில் தனியுரிமை

- தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்குவதில் ஈடுபடும் புதிய செயல்முறைகள்/ சேவைகள்/ தொழினுட்பங்கள் மற்றும்/அல்லது தளங்களின் ஆரம்பத் திட்டமிடல்/ வடிவமைப்பு நிலைகள் மற்றும் முழு மேம்பாட்டுச் செயல்முறை முழுமைக்கும் தனியுரிமையை முன்முனைப்புடன் உட்பொதிப்பதற்கான செயல்முறையை நாங்கள் நிறுவியுள்ளோம்.

- தனியுரிமையை மேம்படுத்துவதற்காக தொழில் நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகளுக்கான கருதுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (எ.கா. புனைப்பெயராக்கம், அநாமதேயமாக்கம், தரவுக் குறைப்பு, தரவுத் தொகுப்பாக்கம்). அத்துடன், சேகரிக்கப்படும் அல்லது செயலாக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் அவை செயலாக்கப்படும் நோக்கத்திற்கான தேவைகளுக்குப் போதுமானதாக, தொடர்புடையதாக மற்றும் வரம்புடையதாக உள்ளன என்பதை உறுதிப்படுத்த பொருத்தமான தொழில் நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகளை எடுப்போம்.

- கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பொறுத்த வரை மேலுள்ளவற்றுடன் கூடுதலாக, CCPA இல் வரையறுக்கப்பட்ட படி தனிப்பட்ட தகவல்களை ''நுகர்வோர் தகவல்களை ஒன்றிணைத்தல்'' அல்லது ''அடையாள நீக்கம்'' போன்ற நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களின் தனியுரிமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். நாங்கள் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் இடங்களில், விளைவாகக் கிடைக்கும் தகவல்களை அடையாளம் நீக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே பயன்படுத்துவோம் சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவை தவிர அதை மீண்டும் அடையாளம் காண முயற்சிக்க மாட்டோம்.

## தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகள்

GDPRஇன் படி, உங்கள் வழங்கப்பட்ட தனிப்பட்ட தரவுகளைக் குறித்து பின்வரும் உரிமைகளைக் கொண்டுள்ளீர்கள்:.

- உங்கள் தனிப்பட்ட தரவுகளுக்கு அணுகலைப் பெறும் உரிமை:

  GDPR சட்டவிதி 15 இன் படி, நீங்கள் உங்கள் தனிப்பட்ட தரவின் நகலைக் கோரலாம். குறிப்பாக, செயலாக்கத்தின் நோக்கங்கள், தரவுகளின் வகைகள், உங்கள் தரவு பகிரப்பட்டுள்ள அல்லது பகிரப்படும் பெறுநர்களின் வகைகள், தரவு தக்கவைத்தல் காலம், திருத்தம், அழித்தல், செயலாக்கத்தை வரம்பிடுதல், அல்லது திருத்தம், அழித்தல், செயலாக்கத்தின் வரம்பிடலை ஆட்சேபித்தல் ஆகியவற்றிற்கான உரிமைகள் அல்லது ஆட்சேபிப்பதற்கான உரிமைகள் உள்ளதா, புகாரைப் பதிவு செய்வதற்கான உரிமை

*உள்ளதா, உங்கள் தரவு எங்களால் நேரடியாகச் சேகரிக்கப்படாவிட்டால் அதன் மூலம், மற்றும் தானியக்க முடிவெடுத்தல் உள்ளதா, பொருந்தினால், புரோபைலிங் மற்றும் அதன் விவரங்களின் குறிப்பிடத்தக்க தகவல்களைக் நீங்கள் கோர முடியும்.*

*தயவுசெய்து கவனிக்க,* GDPR *படி உங்கள் தனிப்பட்ட தரவுகளின் அணுகல் அல்லது நகல்களுக்கான கோரிக்கைகளை நாங்கள் மறுப்பதற்கு உரிமை கொண்டிருக்கும் சூழ்நிலைகளும் உள்ளன, குறிப்பாக அத்தகைய வெளிப்படுத்தல் மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் கடுமையாகப் பாதிக்கும் இடங்களில்.*

- *உங்கள் தனிப்பட்ட தரவு துல்லியமற்றதாக அல்லது முழுமையற்றதாக இருந்தால் திருத்தத்தைப் பெறும் உரிமை* (*விதி.* 16 GDPR).
- *விதி.* 17 GDPR *இன் படி உங்கள் தனிப்பட்ட தரவை அழிக்கப் பெறும் உரிமை (‘மறக்கப்படுவதற்கான உரிமை’)*: GDPR *இன் படி பின்வரும் சூழ்நிலைகளில் ஒன்று பொருந்தும் இடங்களில் அழிக்கப் பெறும் உரிமை உள்ளது. மற்ற பிற சூழ்நிலைகளில் அதனைத் தக்கவைக்க சட்டரீதியாக நாங்கள் உரிமை கொண்டுள்ளோம் என்பதை கவனத்தில் கொள்க*:
  - *அவை சேகரிக்கப்பட்ட அல்லது செயலாக்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் அவை இனி தேவையில்லை எனில்;*
  - *அவற்றின் செயலாக்கம் ஒப்புதல் அடிப்படையில் அமைந்து நீங்கள் உங்கள் ஒப்புதலைப் திரும்பப் பெற்றால், மேலும் செயலாக்குவதற்கு வேறு சட்டரீதியான அடிப்படைகள் இல்லை எனில்;*
  - *அச்செயலாக்கம் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டால்;*
  - *நீங்கள் உங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் செயலாக்கத்தை ஆட்சேபித்து, அதனை இரத்து செய்யக்கூடிய செயலாக்கத்திற்கான முறையான அடிப்படைகள் எதுவும் இல்லை எனில்;*
  - *சட்டவிரோதமாக உங்கள் தரவுகள் செயலாக்கப்பட்டால்; அல்லது*
  - *சட்டப்பூர்வக் கடமைக்கு இணங்க உங்கள் தரவுகள் அழிக்கப்பட்டிருந்தால்.*
- GDPR (*விதி.* 18 GDPR) *இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் படி உங்கள் தனிப்பட்ட தரவுகள் செயலாக்கத்தைத் தடை பெறும் உரிமை.*
- *எந்த நேரத்திலும் உங்கள் குறிப்பிட்ட சூழ்நிலை தொடர்பான அடிப்படைகளில் உங்கள் தனிப்பட்ட தரவு செயலாக்கத்தை ஆட்சேபிக்கும் உரிமை. உங்கள் தனிப்பட்ட தரவு நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காகச் செயலாக்கப்படும் இடங்களில், அதுபோன்ற சந்தைப்படுத்தலுக்காக தனிப்பட்ட தரவை செயலாக்குவதை எந்த நேரத்திலும் ஆட்சேபிக்க நீங்கள் உரிமை கொண்டுள்ளீர்கள், இதில்*

அத்தகைய நேரடிச் சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய அளவிற்கு புரோபைலிங்கும் அடங்கும் (விதி. 21. GDPR).

- ஒரு தரவுக் கட்டுப்பாட்டாளராக எங்களிடம் வழங்கப்பட்ட உங்கள் தனிப்பட்ட தரவை கட்டமைக்கப்பட்ட, பொதுவாகப் பயன்படுத்தப்படும் மற்றும் கணினியால் படிக்கக்கூடிய வடிவத்தில் பெறுதல் மற்றும் அந்தத் தனிப்பட்ட தரவை மற்றொரு கட்டுப்பாட்டாளருக்கு அனுப்புவதற்கான உரிமை ('தரவு பெயர்வுத்திறன்)

  கவனிக்க, GDPR சட்டவிதி 20 இன் படி, இந்த உரிமை செயலாக்கமானது உங்கள் ஒப்புதல் அல்லது ஒப்பந்தத்தைச் சட்டரீதியான அடிப்படையாகக் கொண்டு இருக்கும் போது, நீங்கள் எங்களுக்கு உண்மையில் வழங்கிய தனிப்பட்ட தரவுகளுக்கு மட்டுமே பொருந்தும்.

- உங்களின் ஏதேனும் தரவுப் பாதுகாப்பு உரிமைகள் எங்களால் மீறப்பட்டுள்ளன என நீங்கள் நினைத்தால், தகுந்த தரவுப் பாதுகாப்பு மேற்பார்வை அதிகாரியிடம் புகாரைப் பதிவு செய்யும் உரிமை. புகாரைப் பதிவு செய்ய, இந்தக் கொள்கையின் பிரிவு 22 இல் வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பாருங்கள்.

- பிரெஞ்சு தரவுப் பாதுகாப்புச் சட்டம் சட்டவிதி 48 இன் கீழ், தரவு உட்படுத்தப்படுபவர்கள் இறப்பிற்குப் பின் தங்கள் தனிப்பட்ட தரவை நிர்வகிப்பதற்கான வழிமுறைகளை வரையறுக்கவும் உரிமை கொண்டுள்ளனர்.

மேற்கண்ட உரிமைகளைப் பயன்படுத்த உங்களுக்கு எங்கள் உதவி தேவைப்பட்டால், கீழே பிரிவு 22 இல் குறிப்பிட்ட படி எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

- உங்கள் தனிப்பட்ட தரவின் செயலாக்கம் ஒப்புதல் அடிப்படையில் இருந்தால், நீங்கள் எந்த நேரத்திலும் உங்கள் ஒப்புதலைத் திரும்பப் பெறலாம் (விதி. 7 (3) GDPR). ஒப்புதலைத் திரும்பப் பெறுவதற்கான உங்கள் உரிமையை கீழே பிரிவு 22 இல் குறிப்பிட்ட படி எங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் செயல்படுத்தலாம். ஒப்புதலைத் திரும்பப் பெறுவது என்பது அதன் திரும்பப் பெறுவதற்கு முந்தைய ஒப்புதல் அடிப்படையிலான செயலாக்கத்தின் சட்டப்பூர்வத்தன்மையைப் பாதிக்காது. சில சூழ்நிலைகளில் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவைச் செயலாக்க (ஒப்புதல் தவிர) மற்றொரு சட்டரீதியான அடிப்படையைக் கொண்டிருக்கும் போது சட்ட அடிப்படை மாற்றத்தை முன்பே உங்களுக்கு அறிவித்த படி உங்கள் ஒப்புதல் இன்றித் தொடர்ந்து செயலாக்குவது எங்களுக்கு சட்டப்பூர்வமானதாகும்.

- உங்கள் தனிப்பட்ட தரவின் ஆன்சைட் அணுகலைப் பெறும் உரிமை (மெக்சிகோவிற்கு மட்டும்).

- உங்கள் தனிப்பட்ட தரவின் செயலாக்கத்தை இரத்து செய்யக்கோரும் உரிமை (மெக்சிகோவிற்கு மட்டும்)

- உங்கள் தனிப்பட்ட தரவின் பயன்பாடு மற்றும் வெளிப்படுத்தலை வரம்பிடும் உரிமை (மெக்சிகோவிற்கு மட்டும்).

அந்தந்த அதிகார எல்லைகளுக்குப் பொருந்தும் தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகள் பின்வருமாறு:

| தரவு உட்படுத்தப்படுபவர்களின் உரிமைகள் | ஐரோப்பா UK சுவிட்சர்லாந்து உட்பட | US | கனடா | மெக்சிக்கோ | ஆஸ்திரேலியா | சிங்கப்பூர் | இந்தியா | UAE | சீனா | ஹாங்காங் | தென் ஆப்பிரிக்கா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் / அணுகலுக்கான உரிமை | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| ஒப்புதலை திரும்பப் பெறும் உரிமை (விலகல்) | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| செயலாக்கத்தை ஆட்சேபிக்கும் உரிமை | ஆம் | | ஆம் | ஆம் | | | ஆம் | ஆம் | ஆம் | | ஆம் |
| செயலாகத்தைத் தடை செய்யும் உரிமை | ஆம் | | ஆம் | | | | ஆம் | ஆம் | ஆம் | | ஆம் |
| அழிப்பதற்கான உரிமை (மறக்கப்படுவதற்கான) | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | | | ஆம் | ஆம் | ஆம் | | |
| திருத்துவதற்கான உரிமை | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| தரவு பெயர்வுத்திறனுக்கான உரிமை | ஆம் | ஆம் | ஆம் | | | | ஆம் | ஆம் | ஆம் | | |
| தானியக்க முடிவெடுத்தல்/புரோபைலிங்கிற்கு உட்படுத்துவதை தடை செய்யும் உரிமை | ஆம் | | ஆம் | | | | | | ஆம் | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேற்பார்வை அதிகாரிக்கு புகார் செய்யும் உரிமை | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் | ஆம் |
| உரிமைகளைப் பயன்படுத்தியதற்காக பாகுபடுத்தலுக்கு உட்படுத்துவதைத் தடுக்கும் உரிமை | ஆம் | கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் | ஆம் | | | | | | | | ஆம் |
| தரவு விற்பனையிலிருந்து விலகுதல் | ஆம் | கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் | ஆம் | | | | | | | | |
| உங்கள் தனிப்பட்ட தரவின் செயலாக்கத்தை இரத்து செய்யக் கோரிக்கை எழுப்பும் உரிமை | | | | ஆம் | | | | | | | |
| உங்கள் தரவின் பயன்பாடு மற்றும் வெளிப்படுத்தலை வரம்பிடுதல். | | | | ஆம் | | | | | | | |
| உங்கள் தனிப்பட்ட தரவின் ஆன்சைட் அணுகலைப் பெறும் உரிமை | | | | ஆம் | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்ட உரிமைகளைப் பயன்படுத்த அல்லது உங்கள் தனிப்பட்ட தரவைப் பொறுத்த வரை நீங்கள் மேலே பட்டியலிடப்படாத வேறு ஏதேனும் அதிகார எல்லையைச் சேர்ந்தவர் எனில், நீங்கள்

பின்வரும் தகவல்களுடன் dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்:

- முழுப் பெயர்:
- மின்னஞ்சல் முகவரி:
- நீங்கள் பயன்படுத்த விரும்பும் தரவு உட்படுத்தப்படுபவர் உரிமை:
- LTIMindtree உடனான உறவு (வேலை விண்ணப்பதாரர், மாணவர், வாடிக்கையாளர், ஒப்பந்ததாரர், LTIMindtreeஇன் ஊழியர், இணையத்தளப் பார்வையாளர், LTIMindtree பார்வையாளர், LTIMindtreeஇன் முன்னாள் ஊழியர், LTIMindtreeஇன் தரவு உட்படுத்தப்படுபவரின் சார்பாக, 16 வயதிற்குட்பட்ட தரவு உட்படுத்தப்படுபவரின் சார்பாக)
- வசிக்கும் நாடு:
- கோரிக்கை விவரங்கள்:

பொருந்தும் நடைமுறைகள் மற்றும் தேவைகளைப் பற்றி கூடுதல் விவரங்களைப் பெற, நீங்கள் dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொண்டு கோரிக்கை எழுப்பலாம்

## 1.1 கலிபோர்னியாதனியுரிமைகள்

முந்தைய 12 மாதங்களில், நாங்கள் பின்வரும் தனிப்பட்ட தகவல்களின் வகைகளைச் சேகரித்துள்ளோம்: அடையாளங்காட்டிகள், நிதித் தகவல்கள், உடல்நலம் மற்றும் மருத்துவத் தகவல்கள், மக்கள் தொகைத் தகவல்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பண்புகள் தொடர்பான தகவல்கள், வணிகத் தகவல்கள், பயோமெட்ரிக் தகவல்கள், இணையம் அல்லது பிற மின்னணு நெட்வொர்க் செயல்பாட்டுத் தகவல்கள், புவியமைவிடத் தகவல்கள், ஆடியோ, மின்னணு, மற்றும் காட்சித் தகவல்கள், தொழில்முறை அல்லது வேலை தொடர்பான தகவல்கள், முக்கியத் தனிப்பட்ட தரவுகள், மற்றும் நாங்கள் சேகரித்த பிற தகவல்களிலிருந்து பெறப்பட்ட ஊகங்கள். நாங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும் மூலங்களின் வகைகள் பிரிவு 5 இல் விவரிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கான தொழில் மற்றும் வணிக நோக்கங்கள் பிரிவுகள் 6 மற்றும் 9 இல் விவரிக்கப்பட்டுள்ளன. முந்தைய பன்னிரண்டு மாதங்களில் நாங்கள் விளம்பரம் செய்தல் மற்றும் பிற வணிக நோக்கங்களுக்காக விளம்பரக்கூட்டாளர்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்களுடன் அடையாளங்காட்டிகள், இணையம் மற்றும் பிற மின்னணு நெட்வொர்க் செயல்பாட்டுத் தகவல்கள், மற்றும் ஊகத் தகவல்களை பகிர்ந்துள்ளோம். நாங்கள் பிரிவு 17 இல் அடையாளப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக மற்றும் பெறுநர் வகைகளுக்கு மேலே விவரிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களின் வகைகளை வெளிப்படுத்தியுள்ளோம். நாங்கள் 16 வயதிற்குட்பட்ட நபர்களைப் பற்றிய தகவல்களை தெரிந்தே பகிர்வதோ விற்பதோ இல்லை மேலும் நாங்கள் முக்கியத் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதற்கு வரம்பிடுவதற்கான உரிமை குறித்த அறிவிப்புக் கொடுக்கத் தேவைப்படும் முக்கியத் தனிப்பட்ட தரவுகளை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்துவதில்லை.

கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களைக் குறித்து வணிகங்கள் சேகரிக்கும், விற்கும், பகிரும் அல்லது வெளிப்படுத்தும் தனிப்பட்ட தகவல்களின் வகைகளைப் பற்றி மேலும் அறிவதற்குக் கோரும் உரிமையை

CCPA கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு வழங்குகிறது, நாங்கள் அந்தக் கோரிக்கையைச் சரிபார்த்த பின் கோரிக்கை விடுக்கும் கலிபோர்னியாவில் குடியிருப்பவருக்கு அந்தத் தகவல்களைக் கட்டணமில்லாமல் வழங்குவோம். நாங்கள் 12 மாத காலத்தில் இரண்டு முறைக்கு மிகமால் அத்தகைய தகவல்களை வழங்க வேண்டும். CCPA இன் கீழ், "சேகரிப்பது" என்பதில் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களை உற்றுநோக்குவதன் மூலம் அல்லது நேரடியாக, மறைமுகமாக வாங்கப்பட்ட, வாடகைக்குப் பெறப்பட்ட, சேகரிக்கப்பட்ட, பெறப்பட்ட, ஏற்றுக் கொண்ட மற்றும் அணுகிய தகவல்கள் அடங்கும், எனினும், குறிப்பிட்ட முக்கியத் தனிப்பட்ட தரவுகளைப் பொறுத்த வரை எவற்றை வெளிப்படுத்த முடியும் என்பதில் நாங்கள் வரம்பிடப்பட்டிருக்கிறோம்.

CCPA படி நாங்கள் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு தரவு அணுகல் மற்றும் தரவுப் பெயர்வுத்திறனை வழங்குவது தேவையாகிறது.

குறிப்பிட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் தங்களின் தனிப்பட்ட தகவல்களை நீக்கக் கோரும் உரிமையை கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு CCPA வழங்குகிறது.

நாங்கள் ஏதேனும் துல்லியமற்ற தரவைத் திருத்த வேண்டுமென கோரிக்கை விடுக்க கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களை CCPA அனுமதிக்கிறது.

தங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதிலிருந்து விலகிக் கொள்ள கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களை CCPA அனுமதிக்கிறது.

CCPAஇன் கீழ் தங்களின் உரிமைகளைப் பயன்படுத்துவதைத் தேர்ந்தெடுக்கும் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களுக்கு எதிரான பாகுபாட்டை CCPA தடை செய்கிறது.

நீங்கள் மேற்கண்ட ஏதேனும் கோரிக்கைகளை நிறைவு செய்ய முயற்சிக்கிறீர்கள் எனில் பின்வரும் தகவல்களுடன் dataprotectionoffice@ltimindtree.com என்ற முகவரிக்கு எழுதுவதன் மூலம் தரவுத் தனியுரிமை அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள்:

- முழுப் பெயர்:
- மின்னஞ்சல் முகவரி:
- நீங்கள் பயன்படுத்த விரும்பும் தரவு உட்படுத்தப்படுபவரின் உரிமை:
- LTIMindtree உடனான உறவு (வேலை விண்ணப்பதாரர், மாணவர், வாடிக்கையாளர், ஒப்பந்ததாரர், LTIMindtreeஇன் ஊழியர், இணையத்தளப் பார்வையாளர், LTIMindtree பார்வையாளர், LTIMindtreeஇன் முன்னாள் ஊழியர், LTIMindtreeஇன் தரவு உட்படுத்தப்படுபவரின் சார்பாக, 16 வயதிற்குட்பட்ட தரவு உட்படுத்தப்படுபவரின் சார்பாக)
- வசிக்கும் நாடு:

- கோரிக்கை விவரங்கள்:

தங்களின் தனிப்பட்ட தகவல்களை வழங்கும் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்கள் நாங்கள் மூன்றாம் தரப்புகளின் சொந்த நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக அவர்களுக்கு வெளிப்படுத்திய தங்களைப் பற்றிய தகவல்களைக் கோர உரிமை கொண்டுள்ளனர் (பொருந்தினால்), இதில் தகவல்களின் வகைகள் மற்றும் அந்த வணிகங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கும். நாங்கள் கலிபோர்னியாவில் குடியிருப்பவர்களின் தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்புகளின் சொந்த நேரடிச் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக அவர்களுடன் தற்போது பகிர்வதில்லை.

மேலும் தகவல்களுக்குப் பார்க்க "LTIMindtree கலிபோர்னியா தனியுரிமை அறிக்கை."

## தானியக்க முடிவெடுத்தல்

உங்கள் தனிப்பட்ட தரவின் தானியக்கச் செயலாக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, உங்களுக்காகன சட்டரீதியான அல்லது அதையொத்த விளைவுகளை உடைய முடிவுகளை எடுக்க நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவதில்லை. நாங்கள் தானியக்க தனிநபர் முடிவெடுத்தலை எதிர்காலத்தில் செயற்படுத்தினால், அந்தச் செயலாக்கத்திற்கு முன் நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம் மற்றும் உங்கள் கருத்தை வெளிப்படுத்தும் மற்றும் அம்முடிவை எதிர்க்கும் உரிமை உள்ளிட்ட உங்கள் உரிமைகளைக் குறித்து உங்களுக்குத் தெரிவிப்போம்.

## மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தல்

நாங்கள் பின்வரும் சூழ்நிலைகளில் எங்கள் பெருநிறுவனக் குழுமத்திலுள்ள துணை நிறுவனங்களுக்கு சில தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தலாம்:

- பணியாளர் நிர்வாகம், ஊழியர் வேலை மற்றும் வணிக மேலாண்மை நோக்கங்கள்.
- ஓர் செல்லுபடியாகும் ஒப்பந்தத்தினால் சட்டப்படி பிணைக்கப்பட்டிருக்கும் சேவையை வழங்குவதற்காக.
- அன்றாட வணிகப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக.
- தரவு உட்படுத்தப்படுபவர்களை அடையாளம் காணவும் தொடர்பு கொள்ளவும்.
- உள்ளூர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக.
- பாதுகாப்பு நிர்வாக நோக்கங்களுக்காக.
- நிகழ்வுகளும் முன்னெடுப்புகளும்
- நாங்கள் மூன்றாம் தரப்புகளின் உதவியைச் செயலாக்கத்திற்குச் சார்ந்திருக்கும் இடங்களில் மற்றும் தனிப்பட்ட தரவுகளின் அந்த வெளிப்படுத்தலுக்காகச் சட்டப்பூர்வத் தேவையைப் பூர்த்தி செய்திருக்கும் இடங்களில் பெருநிறுவனக் குழுமத்திற்கு வெளியேயும் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பகிரலாம்.. இதில் இவர்களும் அடங்குவர்:
- இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களின் செயலாக்கம் தொடர்பில், இரகசியத்தன்மை கடமைகளால் பிணைக்கப்பட்டிருக்கும், மூன்றாம் தரப்பு

முகவர்கள்/ சப்ளையர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள். இதில் IT மற்றும் தகவல் தொடர்பு சேவை வழங்குநரும் அடங்குவர்.

- நாங்கள் வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய மூன்றாம் தரப்புகள். இதில் வன்பொருள் அல்லது மென்பொருள் உற்பத்தியாளர்கள், பிற தொழில்முறை சேவை வழங்குநர்கள், ஒழுங்குமுறையாளர்கள், அதிகாரிகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்கள் அடங்கும்.
- சட்டம், ஒழுங்குமுறை அமைப்புகள், அமலாக்க அமைப்புகள் அல்லது நீதிமன்ற ஆணையால் தேவைப்படும் அளவிற்கு, எந்தவொரு சட்ட/ஒழுங்குமுறைக் கடமையுடன் இணங்குவதற்காக தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்/ முக்கியத் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் வெளிப்படுத்தலாம். அதுபோன்ற நிகழ்வுகளில் சட்டத்தால் அனுமதிக்கபடாத வரை நாங்கள் அந்தக் கோரிக்கைகளை உங்களுக்குத் தெரிவிக்க மாட்டோம்.
- LTIMindtree ஊழியர்களின் பதவி / வேலையின் செயல்திறனுக்குத் தேவைப்படும் இடங்களில், மற்றும் பொருந்தும் சட்டங்களால் அனுமதிக்கப்படும் அல்லது தேவைப்படும் இடங்களில், LTIMindree ஊழியர்களின் வணிகத் தொடர்பு விவரங்கள் மற்றும் தனிப்பட்ட தரவு / தனிப்பட்ட தகவல்களை (எ.கா: OFCCP தரவு, தனிப்பட்ட தொடர்பு விவரங்கள்) எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்களுடன் நாங்கள் பகிரலாம்.
- ஊழியர்கள் நாங்கள் அவர்களின் தனிப்பட்ட தரவுகளைப் பகிர்ந்து கொண்டுள்ள மூன்றாம் தரப்புகளின் பெயரை அறிந்து கொள்ள இந்தக் கொள்கையின் பிரிவு 29 இல் வழங்கப்பட்டுள்ள தொடர்பு விவரங்களைத் தொடர்புகொள்ளலாம்.
- மூன்றாம் தரப்புகளுக்கு தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துவதைப் பொறுத்த வரை, மூன்றாம் தரப்புகளுடனான எழுத்துப்பூர்வ ஒப்பந்தங்கள் மற்றும் தரவுப் பகிர்வு ஒப்பந்தங்கள் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சேவையைச் செயல்படுத்துவது அல்லது பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களால் அனுமதிக்கப்பட்டவற்றைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல்களை தக்கவைத்தல், பயன்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துவதிலிருந்து மூன்றாம் தரப்புகளைத் தடை செய்யும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும்.
- மூன்றாம் தரப்புகளுக்கு தனிப்பட்ட தரவு / தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தும் இடங்களில், LTIMindtree பொருந்தும் தரவுத் தனியுரிமைச் சட்டங்களின் படி பொருத்தமான தொழில் நுட்ப மற்றும் நிறுவன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதிய உத்திரவாதங்களை வழங்கும் திறனுள்ள தரவுச் செயலாக்குபவர்கள் அல்லது துணை செயலாக்குபவர்களைப் பயன்படுத்த நாடும் மேலும் தொடர்புடைய தரவுச் செயலாக்குபவர் அல்லது துணை செயலாக்குபவர் அந்த நடவடிக்கைகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பந்த வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தும்.
- நாங்கள் பல பன்னாட்டு அலுவலகங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்டுள்ளோம் மேலும் நிறுவனத்திற்குள் கையெழுத்திடப்பட்ட நிலையான ஒப்பந்த விதிமுறைகள் உள்ளிட்ட தரவுச் செயலாக்க ஒப்பந்தங்களின் மூலம் வணிக மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக எங்கள் குழும நிறுவனங்களுக்கு இடையே தகவல்களைப் பகிர்கிறோம்.

- சட்டப் படி தேவையான அல்லது அனுமதிக்கப்படும் இடங்களில், ஒழுங்குமுறையாளர்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகள் போன்ற மற்றவர்களுக்கும் தகவல்கள் வழங்கப்படலாம்.
- உங்கள் பதவிக்கு தேவைப்படும் இடங்களில், மற்றும் பொருந்தும் சட்டங்களால் அனுமதிக்கப்படும் அல்லது தேவைப்படும் இடங்களில், உங்கள் வணிகத் தொடர்பு விவரங்கள் மற்றும் தனிப்பட்ட தரவுகள் (எ.கா: OFCCP தரவு, பன்முகத்தன்மை தரவு, தனிப்பட்ட தொடர்பு விவரங்கள்) எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்கள் உடன் பகிரப்படலாம்.
- மேலும் நாங்கள் வாடிக்கையாளர்களுடனான எங்கள் ஒப்பந்தக் கடமைகளுக்கு இணங்குவதற்காக, நாங்கள் கோரிக்கையின் பேரில், உங்கள் ரெசியூம் மற்றும் பின்னணி சரிபார்ப்பு நிலையை அந்த வாடிக்கையாளர்களுக்குப் பகிரலாம் (பொருந்தும் சட்டதால் அனுமதிக்கப்படும் அல்லது தேவைப்படும் இடங்களில்).
- ஒன்றிணைப்பு, கையகப்படுத்துதல், மறு ஒழுங்குபடுத்துதல், சொத்துக்கள் விற்பனை அல்லது இதுபோன்ற பெருநிறுவனப் பரிவர்த்தனைகளை நாங்கள் அவ்வப்போது கருதக்கூடும். இந்த நிகழ்வுகளில், அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பீடு மற்றும் செயல்பாட்டில் உதவுவதற்காக நாங்கள் தகவல்களுக்கான அணுகலைப் பரிமாற்றலாம் அல்லது அனுமதிக்கலாம். நாங்கள் ஏதேனும் வணிகச் சொத்துக்களை வாங்கினால் அல்லது விற்றால், அந்தப் பரிவர்த்தனையில் ஈடுபடும் மூன்றாம் தரப்புகளுக்கு தனிப்பட்ட தரவுகள் பரிமாற்றப்படலாம்.
- எங்கள் சட்டரீதியான மற்றும் பிற கடமைகளுக்கு இணங்குவதற்காக மற்றும் LTIMindtree குழுமம், LTIMindtree மற்றும் எங்கள் சேவை வழங்குநர்களின் முறையான நிர்வாகத்திற்காக, நாங்கள் பிற மூன்றாம் தரப்புகளுக்குத் தகவல்களை வழங்கலாம், இதில் பின்வருன மட்டுமல்லாது இன்ன பிறவும் அடங்கும், தணிக்கையாளர்கள், கணக்காளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற தொழில்முறை ஆலோசகர்கள், அத்துடன் நிர்வாக அதிகாரிகள், நீதிமன்றங்கள், சட்ட அமலாக்க மற்றும்/அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகள், தீர்ப்பாய நடுவர்கள், வல்லுநர்கள், பாதிக்கப்படும் தரப்புகள் மற்றும்/அல்லது அவர்களின் ஆலோசகர்கள் போன்றவை. உங்கள் தனிப்பட்ட தரவின் துணைச் செயலாக்கத்தின் போது LTIMindtree கொண்டுள்ள கடமைகள் எங்கள் கூட்டாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பிற எந்த மூன்றாம் தரப்பினருடனான எங்கள் ஒப்பந்தங்களில் ஒப்பந்தரீதியாக பிரதிபலிக்கப்படும் என்று LTIMindtree இதன்மூலம் உறுதிப்படுத்துகிறது.
- LTIMindtree எந்தச் சூழ்நிலையிலும் எந்தவொரு தனிப்பட்ட தரவையும் விற்பனை செய்யாது.

## மூன்றாம் தரப்பு இணையத்தளங்களுக்கு இணைப்புகள்

எங்கள் இணையத்தளம் பிற இணையத்தளங்களுக்கான இணைப்புகளை வழங்கலாம், அவை அவற்றின் சொந்தத் தனியுரிமைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. அத்தகைய இணையத்தளங்கள் அந்தந்தத் தனியுரிமைக் கொள்கைகளின் படி நிர்வகிக்கப்படும், அவர்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை எப்படிச் செயலாக்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள நீங்கள் அவற்றைப் பார்க்கலாம்.

எங்கள் சேவைகளைப் பெறும் போது எங்கள் இணையத்தளத்தில் உங்களால் அணுகப்படும் விளம்பரங்கள் உள்ளிட்ட சில உள்ளடக்கம் அல்லது பயன்பாடுகள் மூன்றாம் தரப்புகளால் வழங்கப்படுகின்றன. நீங்கள்

அவர்களின் சேவைகளைப் பயன்படுத்தும் போது இந்த மூன்றாம் தரப்புகள் உங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்க தனியான குக்கீகள் அல்லது பிற கண்காணிப்புத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தலாம். அவர்கள் சேகரிக்கும் தகவல்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் அல்லது வெவ்வேறு இணையத்தளங்கள் மற்றும் பிற இணையச் சேவைகளில் காலப் போக்கில் உங்கள் இணையச் செயல்பாடுகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கலாம். ஆர்வம் சார்ந்த (நடத்தை) விளம்பரப்படுத்தல் அல்லது பிற இலக்கு உள்ளடக்கங்களை உங்களுக்கு வழங்குவதற்காக அவர்கள் இந்தத் தகவல்களைப் பயன்படுத்தலாம். நாங்கள் இந்த மூன்றாம் தரப்புகளின் கண்காணிப்புப் தொழில் நுட்பங்களையோ அல்லது அவர்கள் அணுகிய தரவை அவர்கள் எப்படி பயன்படுத்தக்கூடும் என்பதையோ நாங்கள் கட்டுப்படுத்தவில்லை. விளம்பரம் அல்லது பிற இலக்கு உள்ளடக்கம் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நீங்கள் அதற்குப் பொறுப்பான வழங்குநர்/விளம்பரதாரரை நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## தனிப்பட்ட தரவு/ தனிப்பட்ட தகவல் தரவுகளின் தரம்

- நாங்கள் சேமிக்கும்/ செயலாக்கும் தனிப்பட்ட தரவுகள் / தனிப்பட்ட தகவல்களின் தரத்தைக் கண்காணிக்க நியாயமான செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதை நாங்கள் உறுதி செய்வோம்

- செயலாக்கப்பட்ட தனிப்பட்ட தரவுகள் / தனிப்பட்ட தகவல்கள் முழுமையாக மற்றும் துல்லியமாக மற்றும், தேவைப்படும் இடங்களில், புதுப்பிக்கப்பட்டு உள்ளன என்பதை உறுதிப்படுத்த எங்கள் நிறுவனத்திற்குள் உள்ள ஒவ்வொரு வணிக அலகு & ஆதரவுச் செயல்பாடும் நடவடிக்கைகளை எடுக்கும்.

- எங்கள் ஊழியர்கள் எங்களால் செயலாக்கப்பட்ட அவர்களின் தனிப்பட்ட தரவுகள் / தனிப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மை மற்றும் முழுமைத்தன்மையை மீளாய்வு, புதுப்பிப்பு மற்றும் உறுதி செய்ய முடிவதை உறுதிப்படுத்தும் ஓர் செயல்முறையை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம்.

## தரவுச் செயலாக்கத்தில் மாற்றங்களை நிர்வகித்தல்

இந்தக் கொள்கையில் வேறு வகையில் விவரிக்கப்பட்டவற்றைத் தவிர, நாங்கள் மேலே விவரிக்கப்பட்ட, அல்லது அந்தத் தரவுகளை உங்களிடமிருந்து கோரும் நேரத்தில் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்துவோம். இந்தத் தனியுரிமைக் கொள்கையில் விவரிக்கப்பட்டவை அல்லாத பிற நோக்கங்களுக்காக அல்லது உங்கள் தனிப்பட்ட தரவு முதலில் சேகரிக்கப்பட்டது அல்லாத பிற நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவு செயலாக்கப்பட வேண்டியிருந்தால், எந்தவொரு செயலாக்கத்திற்கு முன்பும் அந்தப் பிற நோக்கத்தைப் பற்றிய தகவல்களை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம் மற்றும் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட படி தொடர்புடைய பிற தகவல்களை உங்களுக்கு வழங்குவோம், பொருந்தும் போது உங்கள் ஒப்புதலையும் சேகரிப்போம். பொருந்தும் உள்ளூர் சட்டங்களால் தேவைப்படும் இடங்களில், நீங்கள் ஒப்புதலளித்த நோக்கங்களைத் தவிர பிறவற்றிற்காக உங்கள் தனிப்பட்ட தரவு செயலாக்கப்படுவதற்கு முன் நாங்கள் உங்கள் ஒப்புதலைப் பெறுவோம். மற்றும் பொருந்தும் உள்ளூர் சட்டங்களால் தேவைப்படும் அளவிற்கு, அத்தகைய பிற நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவு பயன்படுத்தப்படுவதற்காக உங்கள் ஒப்புதலைப் பெறுவோம்.

## HIPPA தனியுரிமை மற்றும் பாதுகாப்புத் தேவைகள்

இந்தப் பிரிவு மருத்துவக் காப்பீடு பெயர்வுத்தன்மை மற்றும் பொறுப்புடைமைச் சட்டத்தின் (“HIPAA”) கீழ் வணிகக் கூட்டாளராக LTIMindtree இன் கடமைகளை விவரிக்கிறது.

I. தனியுரிமை அதிகாரி

LTIMindtree இன் தரவுப் பாதுகாப்பு அதிகாரி (இந்தக் கொள்கையின் பிரிவு 22 இல் குறிப்பிட்ட படி) தனியுரிமை அதிகாரியாகவும் HIPAA-தொடர்பான விவகாரங்களில் அனைத்து விசாரணைகளுக்கும் LTIMindtreeகான ஒற்றைத் தொடர்புப் புள்ளியாகவும் செயல்படுவார். தனியுரிமை 43அலுவலகம் பின்வருனவற்றிற்கும் பொறுப்பாகும்:

- PHI இன் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் உருவாக்கமும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் அதற்கான LTIMindtree இன் கடமைகள்;
- தனியுரிமை விதிகளுடன் இணக்கம்;
- மீறல் அறிவிப்பு செயல்முறையை நிறுவுதல் மற்றும் ஏதேனும் மீறல்களின் போது பாதுகாக்கப்பட்ட நிறுவனத்துடன் ஒருங்கிணைத்தல்;
- பயிற்சித் திட்டத்தை உருவாக்குதல்; மற்றும்
- PHIஐப் பாதிக்கும் சட்டம் மற்றும் நடைமுறைகளின் மாற்றங்களைக் கண்காணித்தல்.

II. வணிகக் கூட்டாளர் ஒப்பந்தங்கள்

LTIMindtree ஆனது வணிகக் கூட்டாளர் ஒப்பந்தம் (BAA) இன்றி PHIஐப் பெறுவதோ, அணுகுவதோ, பயன்படுத்துவதோ செயலாக்குவதோ இல்லை. பாதுகாக்கப்பட்ட நிறுவனம் அல்லது வணிகக் கூட்டாளரிடமிருந்து (இனி LTIMindtree “வாடிக்கையாளர்” என குறிக்கப்படுகிறது) பெறப்பட்ட PHI ஆனது பொருந்தும் HIPAA தனியுரிமை விதிகள், பாதுகாப்பு விதிகள், மற்றும் பொருளாதார மற்றும் மருத்துவ நலச் சட்டத்திற்கான மருத்துவத் தகவல் தொழில்நுட்பம் (“HITECH சட்டம்”) ஆகியவற்றின் பொருந்தும் விதிமுறைகளின் படி பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை BAA உறுதிப்படுத்துகிறது.

தனியுரிமை அதிகாரி எல்லா BAAகளின் பதிவேட்டைப் பராமரிப்பார் மேலும் அந்த BAAகளில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு இணக்கத் தேவைகளையும் நிர்வகிப்பார்.

BAA முடிவுக்கு வந்த பின், LTIMindtree வாடிக்கையாளரிடமிருந்து பெற்று பராமரிக்கும் அனைத்து PHI களையும் திரும்ப ஒப்படைக்கும் அல்லது அழிக்கும், மற்றும் அந்தத் தகவல்களின் எந்த நகல்களும் தக்க வைக்கப்படாது. திரும்ப ஒப்படைத்தல் அல்லது அழித்தல் சாத்தியமில்லை எனில், LTIMindtree அந்த PHI

தனது உடைமையில் மற்றும் பாதுகாப்பில் இருக்கும் வரை, BAA மற்றும் பொருந்தும் சட்டத்தின் விதிமுறைகளின் படி அந்த PHI ஐத் தொடர்ந்து பாதுகாக்கும்.

III. பாதுகாக்கப்பட்ட உடல்நலத் தகவல்களைப் பயன்படுத்துதல் மற்றும் வெளிப்படுத்தல்

LTIMindtree மற்றும் அதன் வாடிக்கையாளர் இடையேயான வணிகக் கூட்டாளர் ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள், மற்றும் HIPAA கீழ் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்கி மட்டுமே LTIMindtree ஆனது PHI ஐப் பயன்படுத்தும் மற்றும் வெளிப்படுத்தும்.

தனிநபரால் அல்லது, சட்டரீதியான ஆணைக்கு இணங்கி, சட்டத்தில் குறிப்பிட்ட படி கட்டாய வெளிப்படுத்தல் கோரிக்கை LTIMindtreeக்கு நேரடியாக அல்லது HIPAA இன் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக HHSக்கு விடுக்கப்பட்டால், LTIMindtree சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு, அந்த PHI யாரிடமிருந்து பெறப்பட்டது என்பதை வாடிக்கையாளருக்கு அறிவிக்கும், மேலும் அந்த வாடிக்கையாளரின் வழிகாட்டுதல்களின் படி கோரப்பட்ட வெளிப்படுத்தலை மேற்கொள்ளும்.

LTIMindtree தொடர்புடைய நபர்களின் அங்கீகாரம் இன்றி, பொருந்தும் சட்டம் மற்றும் BAA வில் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட நோக்கங்களைத் தவிர்த்து வேறு எந்த நோக்கத்திற்காகவும் PHI ஐ செயலாக்காது; எனினும், அந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்கான தனிப்பட்ட மற்றும் முழுமையான பொறுப்பு அந்தச் செயலாக்கம் எவர் சார்பாக நடைபெற உள்ளதோ அந்த LTIMindtree வாடிக்கையாளருடையதாகும் மேலும் தேவையான அங்கீகாரங்களைப் பெறுவதில் ஏற்படும் வாடிக்கையாளரின் ஏதேனும் தாமதம் அல்லது இழப்புகளுக்கு LTIMindtree சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு, பொறுப்பாகாது.

IV. பயிற்சி

தங்களின் பணி தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக PHI ஐப் பயன்படுத்த, வெளிப்படுத்த, கோர, அல்லது அணுகலைப் பெற்றிருக்கும் LTIMindtree பணியாளர்கள் HIPAA உடன் இணங்க தங்கள் செயல்பாடுகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு உதவுவதற்காக குறிப்பிடப்பட்ட பயிற்சியைப் பெற வேண்டும். PHI க்கு அணுகலைக் கொண்ட ஊழியர்களுக்கான பயிற்சியானது தொடர்புடைய திட்டத்தில் அவர்களை நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நியாயமான காலத்திற்குள் வழங்கப்படும். பொருந்தும் இடங்களில், அதுபோன்ற பணியாளர்கள் ஆண்டுதோறும் மற்றும் தனியுரிமை அதிகாரியால் தீர்மானிக்கப்படும் கூடுதல் நேரங்களில் புத்தாக்கப் பயிற்சிகளைப் பெற வேண்டும்.

தனியுரிமை அதிகாரி அனைத்து பயிற்சி அமர்வுகளின் தேதி, வருகைப் பதிவேடுகளைப் பொருந்தும் பயிற்சி அமர்வுத் தேதியிலிருந்து ஆறு (6) ஆண்டுகள் வரை பராமரிப்பார்.

V. கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் மீறல்கள்

PHI தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை LTIMindtree மிகத் தீவிரமானதாக எடுத்துக் கொள்கிறது. இந்தக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் PHIஇன் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்கான

LTIMindtreeஇன் உறுதிப்பாட்டுடன் இணக்கமான முறையில் PHI பயன்படுத்தப்படுவதை மற்றும் பராமரிக்கப்படுதவை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாது BAA மற்றும் பொருந்தும் சட்டங்களின் கீழான அதன் கடமைகளுக்கு இணங்கும் முறையில் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

LTIMindtree ஊழியர் மேற்குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகளின் கீழ் தனக்குரிய கடமைகளுக்கு இணங்கத் தவறினால், அவர்கள் தண்டனைகளுக்கு உட்படுத்தப்படலாம், இதில் எச்சரிக்கைகள் (வாய்மொழியாக அல்லது எழுத்துப்பூர்வமாக), மற்றும் வேலை நீக்கம் உள்ளிட்ட கூடுதல் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போன்றவை அடங்கும்.

VI. பாதுகாப்பு அதிகாரி

LTIMindtree இன் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி (CISO) இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட பாதுகாப்புக் கடமைகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான பாதுகாப்பு அதிகாரியாகச் செயல்படுவார். பாதுகாப்பு அதிகாரி LTIMindtreeஇன் பாதுகாப்பு நடவடிக்கைகளை தனியுரிமை அதிகாரியுடன் இணைந்து ஒருங்கிணைப்பார். பாதுகாப்பு அதிகாரியின் விவரங்கள் பின்வருமாறு :

---

சந்தன் பானி

தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி

Chandan.Pani@LTIMindtree.com

VII. பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

LTIMindtree மேலே பிரிவு 13 இல் விவரிக்கப்பட்ட படி தனது கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பில் இருக்கும் PHIஐப் பாதுகாப்பதற்காக தொழில்துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப வலுவான தகவல் பாதுகாப்புக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

## புகார்கள் மற்றும் குறைகளுக்கான தொடர்பு விவரங்கள்

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள், கருத்துக்கள், அல்லது பரிந்துரைகள், புகார்கள் அல்லது குறைகள் இருந்தால், நீங்கள் உங்கள் தனியுரிமை உரிமைகளைப் பயன்படுத்த விரும்பினால் அல்லது ஏதேனும் தனியுரிமைப் பிரச்சினைகள், எங்கள் தனிப்பட்ட தரவு அல்லது தனிப்பட்ட தகவல்களின் பயன்பாடு குறித்து எங்களிடம் வினவ அல்லது ஆலோசிக்க விரும்பினால், நீங்கள் எங்கள் நியமிக்கப்பட்ட தரவுப் பாதுகாப்பு அதிகாரிகளைத் (“DPO”)தொடர்பு கொள்ளலாம்.

தனிப்பட்ட தரவு மற்றும் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு தொடர்பான புகார்களும் உங்கள் தனியுரிமை உரிமைகளைச் செயல்படுத்துவது தொடர்பான எந்தவொரு தகவல் தொடர்புகளும் பின்வரும் தொடர்பு விவரங்களில் உள்ள தரவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பப் பட வேண்டும்:

**LTIMindtree லிமிட்டெட்டிற்கான உலகளாவிய தரவுப் பாதுகாப்பு அதிகாரி:**

- ஜகன்னாத் PV
- மின்னஞ்சல்:
    - dataprotectionoffice@ltimindtree.com
    - Jagannath.PV@ltimindtree.com
- முகவரி: தரவுப் பாதுகாப்பு அலுவலகம்

  வாயில் எண். 5, L&T தொழில் நுட்ப மையம், சகி விகார் சாலை, போவாய், மும்பை– 400072

கவனத்திற்கு: ஜகன்னாத் PV (தரவுப் பாதுகாப்பு அதிகாரி)

தொலைபேசி- +91 22 67766776

**LTIMindtree லிமிட்டெட்டின் (ஜெர்மனி கிளை) தரவுப் பாதுகாப்பு அதிகாரி மற்றும் ஐரோப்பியப் பிரதிநிதி:**

- மத்தியாஸ் மெயிஸ்டர்
    - மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice.eu@ltimindtree.com
    - Matthias.Meister@ltimindtree.com

**ஐக்கிய இராச்சியப் பிரதிநிதி**

- வில்லியம் ஹட்டன்
    - மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com
    - William.Hatton@ltimindtree.com

**சுவிட்சர்லாந்து பிரதிநிதி**

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

**ஐக்கிய அரபு அமீரகம்**

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

**தென் ஆப்பிரிக்கப் பிரதிநிதி**

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

உங்கள் புகாருக்கு நியாயமான காலத்திற்குள், பொதுவாக 30 நாட்களுக்குள், பதிலளிக்க நாங்கள் நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்துவோம்.

நீங்கள் தகுந்த மேற்பார்வை அதிகாரியிடமும் உங்கள் குறைகளை எழுப்பலாம் அல்லது புகாரைப் பதிவு செய்யலாம். ஐரோப்பிய ஒன்றியத்தின் தரவுப் பாதுகாப்பு அதிகாரிகளின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை இங்கே காணலாம்.

LTIMindtree அலுவலகத்தைக் கொண்டுள்ள ஐரோப்பிய நாட்டின் உள்ளூர் மொழியில் இந்த தனியுரிமை அறிவிப்பின் நகலைப் பெற நீங்கள் விரும்பினால் DPO அலுவலகத்தைத் (மேலே குறிப்பிட்ட தொடர்பு விவரங்களில்) தொடர்பு கொள்ளலாம் an office.

நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து, நாங்கள் உங்கள் தனியுரிமைக் கவலைகளை திருப்திகரமாகத் தீர்க்க இயலவில்லையெனில், நீங்கள் ஆஸ்திரேலிய தகவல் ஆணையாளர் அலுவலகத்தை அவர்களின் www.oaic.gov.au இணையத்தளத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## CCTV கண்காணிப்பு

பொருந்தும் உள்ளூர் சட்டங்களால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மட்டும், எங்கள் பொது வளாகப் பகுதிகளில் பார்வையாளர்கள் உள்ளிட்ட நபர்களின் செயல்பாடுகளை CCTV காட்சிகள் மூலம் கண்காணிக்கலாம். அந்தத் தரவு பிற சட்டரீதியான இணக்கத் தேவைகளைக் கருத்தில் கொண்ட பின் LTIMindtree தக்கவைத்தல் கொள்கையின் படி வைக்கப்படும்.

## LTIMindtree நிறுவனங்களின் பட்டியல்

நாங்கள் இந்தக் கொள்கையின் பிரிவு 17 இல் பட்டியலிடப்பட்ட நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவை எங்கள் தாய் நிறுவனமான லார்சன் & டர்போ மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்குப் பரிமாற்றலாம். லார்சன் மற்றும் டர்போவின் நிறுவனங்கள் மற்றும் கிளைகளின் பட்டியலைப் பார்க்க இங்கே கிளிக் செய்யுங்கள்.

## கொள்கை மாற்றங்கள் மற்றும் பதிப்பித்தல்

இந்தக் கொள்கை கடைசியாக நவம்பர் 14, 2022 அன்று புதுப்பிக்கப்பட்டது.

இந்தக் கொள்கை உங்கள் தனிப்பட்ட தரவுச் செயலாக்கத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்வப்போது திருத்தப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும். நாங்கள் இந்தக் கொள்கையைப் புதுப்பித்தால், மிகச் சமீபத்திய பதிப்பை எங்கள் இணையத்தளத்தில் இந்த வலைப் பக்கத்தில் பதிப்பிப்போம். திருத்தப்பட்ட விதிமுறைகள் பதிவிட்ட உடன் அல்லது எங்களால் அறிவிக்கப்பட்ட படி உடனடியாக நடைமுறைக்கு வரும். நாங்கள் ஏதேனும் மாற்றங்களுக்காக இந்தக் கொள்கையை அவ்வப்போது மீள்பார்வையிட ஊக்கப்படுத்தப்படுகிறீர்கள். நாங்கள் கடைசி மாற்றங்கள் பதிப்பிக்கப்பட்ட தேதியை எப்போதும் குறிப்பிடுவோம்.

LTIMindtree

**LTIMindtree** ஓர் உலகளாவிய தொழில்நுட்ப ஆலோசனை  மற்றும் டிஜிட்டல் தீர்வு நிறுவனமாகும், இது வணிக மாதிரிகளை மறு உருவகிக்கவும், புத்தாக்கத்தை வேகப்படுத்தவும், மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வளர்ச்சியை அதிகரிக்கவும் பல்வேறு தொழில்துறைகளில் பல நிறுனவங்களுக்கு உதவுகிறது.. 700 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் டிஜிட்டல் மாற்றத்திற்கான கூட்டாளராக, ஒருங்கிணையும் உலகில் உயர்தர போட்டி வேறுபாடு, வாடிக்கையாளர் அனுபவம், மற்றும் வணிக வெளிப்பாடுகளை இயக்க உதவும் விரிவான கள மற்றும் தொழில்நுட்ப அனுபவங்களை LTIMindtree வழங்குகிறது. 33 நாடுகளைச் சேர்ந்த 85,000க்கும் மேற்பட்ட திறமையான தொழில்முனைவு நோக்குடைய வல்லுநர்களின் ஆற்றலுடன், LTIMindtree — a Larsen & Toubro Group நிறுவனம் — மிகச் சிக்கலான வணிகச் சவால்களைத் தீர்ப்பதற்காக  மற்றும் பெருமளவு மாற்றத்தை வழங்குவதற்காக முந்தைய Larsen & Toubro Infotech மற்றும் Mindtree நிறுவனங்களின் தொழில்துறையின் பாராட்டுகளைப் பெற்ற வலிமைகளை ஒன்றிணைக்கிறது. மேலும் தகவல்களுக்கு, பார்க்க www.ltimindtree.com.